
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00 பக்கங்கள் பத்து **Registered as a News paper in Srilanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 28 சனிக்கிழமை (12.01.2002) தொலைபேசி 3378 ஒலி 24




### நோர்வே குழுவின் கொழும்பு விஜயம் பூரண வெற்றி

# நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு பிரதமர் ரணில் சம்மதம்

## ஓரிரு தினங்களில் மீண்டும் பாலாவுடன் சந்திப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் சமாதான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு கொழும்பு வந்திருந்த நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஐவர் ஹெல்கீசன் தலைமையிலான விசேட தூதுக்குழுவினரின் கொழும்பு விஜயம் பூரண வெற்றியளித்துள்ளதாகவும், நிரந்தர யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு வழிவகுத்துள்ளதாகவும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் நேற்றிரவு அறிவித்துள்ளது.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கும் வகையில் லண்டனில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான தூதுக்குழுவினர் கடந்த வியாழக்கிழமை கொழும்பு வந்து அரசுத்தலைவர்கள் ம[illegible] தமிழ்கட்சித் தலைவர்க[illegible] பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்புத் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை தனித்தனியே தூதுக்குழு சந்தித்திருந்தது.

இந்தச்சந்திப்புக்களில் இருந்தும் அவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் இருந்தும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையியே

(10ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தீர்வு ஏற்பட்டதும் தமிழர்கள் திருப்பியனுப்பப்படுவர்

## பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கையில் இனப்பிரச்சினை சுமுகமாக தீர்வுஒன்று காணப்பட்டால் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் மக்களில் ஒருதொகுதியினர் திருப்பியனுப்பப்படுவார்கள் என்று பிரிட்டிஷ் பிரதி தூதுவர் நேற்று வவுனியாவில் தெரிவித்துள்ளார்.

வன்னிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதை அடுத்து அங்கு உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவது தொடர்பாக ஆராய்வதற்கு பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் இலங்கையில் இயல்புவாழ்க்கை

(10பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை

## அரசு-புலிகள் பேச்சை இந்தியாவில் நடத்த மத்தியஅரசு அனுமதியாது

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கோடு இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற உள்ள சமாதானப்பேச்சுக்களை தமிழ் நாட்டில் அனுமதிக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்க மாட்டாதென்று இந்திய உள்த்துறை இணைஅமைச்சர் ஐ.டி. சுவாமி கூறியுள்ளார்.

இந்திய உள்த்துறை இணை அமைச்சர் ஐ.டி.சுவாமி இதுதொடர்பான செய்தியாளர் மாநாடொன்றை நாகர்கோவிலில் நடத்திய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக சமரசப்பேச்சுவார்த்தை குறித்து விடுதலைப்புலிகள் விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்கக்கூடாதென்று தமிழ்நாடு அரசு மட்டுமல்ல கர்நாடக அரசும் மத்திய அரசை கேட்டுள்ளதாகவும் புலிகள் அமைப்பு இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பென்பதால் அதன் கோரிக்கையை ஏற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்துள்ளார். (வ)

## சுரேஸ் மாணிக்கவாசகம் கனடாவில் வசிக்கலாம்

### உயர் நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு கனடாவில் நிதி சேகரித்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட சுரேஸ் மாணிக்கவாசகத்தை நாடுகடத்தும் படி கனடா அரசு விடுத்த உத்தரவை மீள் பரிசீலனை செய்யவும் தற்காலிகமாக கனடாவில் தங்க அனுமதி வழங்குமாறும் கனேடிய உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கனடாவில் விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1997ம் ஆண்டு கைது செய்யப்பட்ட சுரேஸ் மாணிக்வாசகத்தை உடனடியக இலங்கைக்கு நாடுகடத்துமாறு கனேடிய அரசுகடும் உத்தரவு பிறப்பத்திருந்தது.

இவ்வுத்தரவை எதிர்த்து தான்

(10ம் பக்கம் பார்க்க)

நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்க வலியுறுத்துவோம்

## டாக்டர் ராமதஸ் தெரிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மத்திய அரசு நீக்கவேண்டுமென்று பாட்டாளி மககள் கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் என்று கட்சித்தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாடு ஒன்றில் பேசும்போதே டாக்டர் ராமதாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சை நடத்த விடுதலைப்புலிகள் மத்திய அரசின் உதவியை நாடிஇருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ள போதும் இது சம்மந்தமாக விடுதலைப்புலிகளிடம் இருந்து எந்தவிதமான தகவலும் கிடைக்க வில்லை

என்று மத்திய அரசு அதிகாரி ஒரு வர் தெரிவித் திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார் இதே வேளை புலிகளின் கோரிக்கை உண்மையா னதாயின் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சென்னையை தவிர்த்து மும்பாயில் இருந்து கொண்டே பேச்சு நடத்தலாம் என் றும், புலிகளின் கோரிக்கை தொடர் பாக மத்திய அரசெடுக்கம் முடிவை தாம் ஆதரிப்பதாகவும் டாக்டர் ரமதாஸ் தெரிவித்துள்ளார். (வ)

## பொருட்களின் விலை வன்னியில் குறைகிறது

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்துக்கு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் எடுத்துச்செலப்படுவதையடுத்து அங்கு பொருட்களின் விலைகளில் பெரும ளவு வீழ்ச்சி கண்டிருப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு லீற்றர் 120ரூபாவரை விற்பனை செய்யப்பட்ட மண்ணெய் தற்போது 70ரூபாவாகவும் 220ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பற்றறி 100ரூபாவாகவும் 120ரூபா விற்பனை செய்யப்பட்ட தேங்காய்எண்ணெய் 90ரூபாவாகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (வ)

## அமெரிக்காவின் ராஜாங்க செயலர் கொழும்பு விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் ஜனநாயகம் மனித உரிமைகள் மற்றும் தொழிற்துறை பிரதி ராஜாங்க செயலாளர் மைக்கல் ஆர்மிலி நேற்று கொழும்பு வந்துள்ளார். இவரது குறுகிய கால விஜயத்தின் போது அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து இனப்பிரச்சனைகள் குறித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந.4)

## நீர்கொழும்பு கடலூடாக இத்தாலிக்கு செல்லமுயன்ற 108பேர் கைதாகினர்

(கொழும்பு)

இத்தாலிக்குள் சட்டவிரோதமாக இரு மீன்பிடி இழுவைப்படகுகளில் செல்லமுயன்ற சுமார் 108பேரை கடற்படையினர் கைது செய்து தடுத்துவைத்துள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு கடற்கரைக்கு சற்று தொலைவில் இவர்களை ஏற்றிச்சென்ற இருபடகுகளை பீரங்கிப்படகுகளில் வந்த கடற்படையினர் சுற்றிவளைத்து சோதனை நடத்தியபோது இவர்கள் இத்தாலி செல்ல முற்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## வவுனியா நெலுக்குளத்தில் பொலிஸ் சார்ஜன் வீட்டுக்கு நேற்று கிரனேற் வீச்சு

(வவுனியா)

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன் கனகராசாவின் நெலுக்குளத்திலுள்ள வீடு கிரனேற் தாக்குதலுக்கு இலக்காகி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றிரவு 9.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சார்ஜன் கனகராஜா வீட்டில் இருக்கவில்லை எனினும் அவரது தம்பியார் சத்தியநேசன் படுகாயமடைந்துள்ளார் இக்கிரனேற் வீச்சு யாரால் மேற்கொள்ளப்பட்டது என்பது அறியப்படவில்லை இது குறித்து வவுனியா பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தநிறுத்தம் மோதல் தவிர்ப்பு கடைப்பிடிக்கப்பட்டு வரும்போது நடைபெற்ற முதலாவது கிரனேற் வீச்சு சம்பவம் இதுவாகும் (வ)

### சிறு விளம்பரம்

**புதிய கணிதம் விசேட வகுப்புகள்**

தரம் 6 லிருந்து O/ Lவரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 37வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் A Or D தரத்திற்குக் கற்பிக்கப்படும். தொடர்பு:- க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி·

(4207)

### வகுப்புக்கள்

ஆண்டு 6இல் இருந்து ஆண்டு11வரை முக்கியபாடங்கள் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சிறந்தஆசிரியர்கள் மூலம் 426 (302) காங்கேசன் துறைவீதி யாழ்ப்பாணம். **SPOKEN ENGLISH** வகுப்புக்களும் நடைபெறுகிறது.

(கி-3261)

### பாதுகாப்பு

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யான அகதிகளும் தீவிரவாதிகளும் நாட்டிற்குள் ஊடுருவலாம் என்றுகருதியே ஈக்குவாடோர்பாதுகாப்புநடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருவதாக தெரியவருகிறது.

(உ-7)

### பாதிக்கப்பட்ட தென்மராட்சிக்கு செல்லாத

# ஜெயலத்தின் யாழ்ப்பாண விஜயத்தால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை

## சுட்டிக்காட்டி ரவிராஜ் எம் பி. கடிதம்

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட கோர யுத்தத்தினால் மக்கள் இடம்பெயர்ந்த, அழிவின் கோரப்பிடிக்குள் சிக்குண்டிருக்கின்ற தென்மராட்சிப் பகுதிக்கு புனர்வாழ்வுஅமைச்சரான தாங்கள் செல்லாவிட்டால் தங்களது யாழ்ப்பாண விஜயத்தினால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவின் இங்கு செல்லவுள்ள நிகழ்ச்சி நிரல் பட்டியலில் தென்மராட்சிப் பகுதி சேர்த்துக் கொள்ளப் படாமை குறித்து தனது அதிருப்தியை வெளியிட்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தாங்கள் 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருப்பதாக அறிகிறேன்.

தற்போதைய நிலைமைகளைக் கணிப்பிடுவதற்காக யுத்தத்தால் சீரழிந்துள்ள யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் தங்கள் முடிவை வரவேற்கிறேன்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகள் தங்கள் பயணத் திட்டத்தில் சேர்க்கப் படாமையையிட்டு நான் அதிர்ச்சியடைகின்றேன்.

தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, கீரிமலை -கொல்லன்கலட்டி உள்ளிட்டவலிவடக்குப் பகுதி,

சாவகச்சேரி நகரம், தனங்கிளப்பு, நாவற்குழி, மட்டுவில் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் உள்ளிட்ட தென்மராட்சி,

கொழும்புத்துறை, அரியாலை, கோட்டை, கொட்டடி உள்ளிட்ட யாழ். நகர் ஆகிய இடங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானிப்பதன் மூலம் தங்கள் பயணம் பயனுடையதாக அமையும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் என்ற வகையில் மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளுக்குச்செல்வதே பொருத்தமானது.

இடம்பெயர்ந்து அகதிகளாகி தற்போது யாழ். மாவட்டத்தில் வசித்து வருகின்ற மக்கள் சார்பாக நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## உழவர் விழா

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உழவர்விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மதியம் 12-00 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் சண். லவக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இந்துகலாசார அமைச்சர் கௌரவ தி. மகேஸ்வரன் அவர்களும், கௌரவ விருந்தினராக வலி மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம் அவர்களும் கலந்து கொள்வார்கள். (செ)

## சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் கல்விப் போதனை

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் ஆண்டு4தொடக்கம் ஆண்டு9வரையான வகுப்புக்களுக்கு ஆங்கில மொழிமூலம் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியபாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கல்வித்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் அடுத்தவருடம் மேலும் விரிவுபடுத்தப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-225)

சம்பந்தப்பட்டோருக்கு

### ஆற்றல்

எமது 18வது இதழது கட்டுரைகள் சகலதும் தயாராக உள்ளன.

ஆனால் 17-வது இதழ் அச்சிட்டமைக்கான கொடுப்பனவு செலுத்த வேண்டியுள்ளது. எம்மிடம் கையளிக்கவென பணத்தை வைத்திருப்போரும், நிலுவை செலுத்த வேண்டியோரும் தயவுசெய்து மணி ஓடர் மூலம் 'சுண்டுக்குளி' தபாலகத்தில் ஆற்றல் ஆசிரியர் பெற்றுக்கொள்ளும் வகையில் அனுப்பும்படி அன்பாக வேண்டுகின்றோம்.

ஆற்றல் ஆசிரியர்
76, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(4202)

### சமகாலச்

மாற்றம் அவசியம் தேவைப்படுகின்றது. போலியோ சொட்டு மருந்து வழங்கும் நாட்களில் மட்டுமே அமைதியை அறிந்த நமதுசிறார்கள் தொடர்ச்சியாக அதனை அனுபவிக்கட்டும்.

**மேலதிகஆவணம்அவசியமா?**

அனைத்துலக ஆவணமாக ஐ.நா. சிறுவர் உரிமைகள் சமவாயம் இலங்கையிலும் நடைமுறையில் உள்ள போது சிறுவர்கள் சமதானத்தின் சரணாலயங்கள் என்பது அவசியம் தானா?சமவாயம்கூறும் பாதுகாப்பு, மேம்பாடு, உயிர் வாழ்தல்பங்களிப்புஉரிமைகள் யாவுமே தொடரும் ஆயுதப் பிணக்குகளால் மறுக்கப் பட்டே வருகின்றன. எனவே இவ் ஆவணம் இவ்விடத்தே அவசியமாகி விடுகின்றது.

**முக்கிய விடயங்கள் என்ன?**

ஆயுதப் பிணக்குகள் ஏற்படும் சமயங்களில்;

ஆயுதப் பிணக்குகளினது கேடுகள் அல்லது தாக்கங்களிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

ஆயுதப் பிணக்குகளில் எவ்வகையிலும்தள்ளப்படாதிருக்கும் அல்லது பாவிக்கப்படாதிருக்கும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

ஆயுதப் பிணக்கின் பாதகமான விளைவுகளிலிருந்து தப்பிக்க உதவி பெறும் உரிமை பிள்ளைக்கு உண்டு.

மேற்படி விடயங்களின்கீழ் இடம்பெயர்ந்த சிறுவர்கள சுகாதாரம், கல்வி, உளவியல், சார் சமூக சீரமைப்பு, புனர்வாழ்வும், மனிதநேயப்பண்டங்கள்கிடைக்கவழிசெய்தல், பால்யபோராளிகள, பாலியல் துஷ்பிரயோகம் என பல்வேறு கொள்கைகளும்செம்மையான நடைமுறைகளும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறாகபல்வேறுநெருக்கடிகளுக்கு மத்தியிலும் இன்னல்களுக்கு முகம்கொடுத்தவாறும் அவதியுறும்நமதுசிறுவர்களுக்கு அவர்களது பராயத்தை அனுபவிக்கத்தக்க சூழலினை அமைத்துக் கொடுக்க நாம் தனியாகவும் கூட்டாகவும் செயற்படத் தயாராவோமாயின் இப்பொழுதே நாளைய உலகு நலமாக நம் கண்களுக்குப் புலப்படும்.

## மின்துண்டிப்புப் பற்றி மின்சாரசபை விளக்கம்

இலங்கை மின்சாரசபை வருடத்தில் மூன்று முறையாவது அதாவது நான்குமாதத்திற் கொருமுறை மின் கட்டணம் செலுத்தாதவர்கட்கு மின் துண்டிப்புச் செய்கிறது. அதைக் கூட ஒருமாதகால அறிவித்தலின் பின்புதான் செய்கிறது. ஆனால் அந்த ஒருமாதகாலப் பகுதிக்குள் (பணத்தை) கட்டணத்தைச் செலுத்தி விட்டு அந்தந்த மின் அத்தியட்சகர்கள் காரியாலயங்களில் பதிவு செய்து கொள்ளும்படிகேட்கப்படுகிறார்கள். ஆனால் எவருமே அப்படிச் செய்வதில்லை. ஏன் அப்படிச் செய்யவேண்டும் எனக்கேட்பவர் பலர்.

உண்மையில் ஒவ்வொருமாதமும் கிரமமாகக் கட்டிக் கொண்டிருப்பவர்கட்கு மின்துண்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. ஒவ்வொரு பில்லிலும் '30 நாட்களுக்குள் செலுத்தப்படவில்லையயின் வேறுஎந்த அறிவித்தலுமின்றி விநியோகம் துண்டிக்கப்படும்' என சிவப்பால் 3 பாஷைகளிலும் அச்சிடப்பட்டுள்ளது.

ஆகவே, சிவப்பு நோட்டிஸ் வழங்கவேண்டும் என்ற தேவையோ அல்லது முன்கூட்டியே அறிவிக்கவேண்டும் என்ற தேவையோ இல்லை. அத்தோடு கிரமமாகக் கட்டிக் கொண்டு வந்தால் துண்டிக்க வேண்டிய பட்டியலில் பெயர் இடம்பெறமாட்டாது. கட்டப்பட்ட பணம் பில்லில் கழித்துவர மூன்றுமாதம் எடுக்கும். ஆகவேதான் 3·4 மாதத்திற்கொருமுறை மின் துண்டிப்பு 2-3 மாத நிலுவைஇருப்போருக்குச் செய்யப்படுகிறது, கடந்த மின்துண்டிப்பு பட்டியலில் யாழ் நகர் 3000, புறநகர் 450 சுன்னாகப்பகுதி, 700, பருத்தித் துறைப்பகுதி 800, வட்டுக்கோட்டை 200

சில மாதங்களின் கட்டணத்தை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுவதாலேயே மின் துண்டிப்பு ஏற்பட வாய்ப்பாகிறது. மின் துண்டிப்பு செய்வதால் மின்சாரசபைக்கும் சிரமம் வெட்டவும் போடவும் என இருமுறை செல்லவேண்டி உள்ளதுஇதேவேளை பாவனையாளரும் சிரமப்பட்டு காரியாலயத்திற்கு வரவேண்டி வருவது அவசரமாக வங்கிக்கு செல்லவேண்டி வரு தும் திடீரென ஒரு தொகைப்பணம் தேட முடியாத நிலையில் இரண்டு மூன்று நாட்கள் இருட்டில் இருக்க வேண்டியும் ஏற்படுகிறது.

மாத மாதம் செலுத்துவதால்- நிலுவை என்றில்லாமல் ஒரு சிறு தொகைப்பணமே தேவைப்படும்- காலக்கிரமத்தில் கழி பட்டும் விடும்மின் துண்டிப்பும் தவிர்க்கப்படும்.

உண்மையில்-மின் துண்டிப்பு செய்யப்பட்டுவிட்டால் மீள்இணைப்பு வழங்க பாவனையாளர்கள் அந்தக் காலம் வரைக்கும் நிலுவவைக் கட்டணத்தை முழுமையாகச் செலுத்த வேண்டும் மேலதிகமாக செலுத்தவேண்டிய நிலுவைதொகையின் 10 வீதமும் அத்துடன் ரூபா550 - (வெட்டிய பூட்டிய கூலியாக) சேலுத்தவேண்டும் சிலரைப் பொறுத்த அளவில் இத்தண்டமே தங்களுடைய பில்லில்(மாதாந்த) தொகையின் மூன்றுமடங்காகக்கூடஇருக்கும்.

மின்மானி இல்லாத இடங்களுக்கு மின்மானிகள்பொருத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன அதற்குக் கூட அவர்கள் விண்ணப்பிக்கவேண்டும் மின்கட்டணம் முழுமையாகக் செலுத்தியிருக்க வேண்டும் மின்சாரசபையோடு ஒப்பந்தம் (உள்ளூராட்சியில் முன்புமின்சாரம் பெற்றவர்கள்) செய்திருக்க வேண்டும் தற்போதும் மின்சாரசபைமூலம் மின்சாரம்பெறுபவர்கள் அத்தனை பேர்களும் மின்சாரசபையோடு ஒப்பந்தம் செய்தவர்கள் அல்லர்.

ஒப்பந்தம் செய்யாமால் இருப்பவர்கள் ஒப்பந்தப் படிவம் பெற்று 100 ரூபாமுத்திரையில் கையொப்பம் இட்டு பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா650 ஐ செலுத்தவேண்டும் (மணிஓடர் பொதுமுகாமையாளர் இ.மி.ச.கொழும்பு) பரஸ்பரஒத்துழைப்பினால் தான் சிரமங்களை மின்சார சபையும் பாவனையாளர்களும் தவிர்த்துக் கொள்ளலாம்.

### தமிழ்ச் சோதிட ஆராய்ச்சிக் கழகம் யாழ்ப்பாணம்.

தமிழ்ச் சோதிடர்கள், சோதிட ஆர்வலர்கள் எமது சோதிட ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்து அங்கத்துவம் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம். நேரம் ஞாயிறு தோறும் பகல் 9.30 — 12.30 மணி

ஆ. சண்முகலிங்கம்
தலைவர்.

502, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(4198)

### தர்ம சாஸ்தா விஷு தர்சன பூஜை

சபரி மலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தர்ம சாஸ்தா (சபரி மலை ஐயப்பனின்) மகர விஷு ஜோதி தர்சன நன்னாளாகிய தைப்பொங்கல் தினத்தன்று மாலை யாழ்ப்பாணம் வண்ணை செந்தில் கதிர் வேலாயுதசுவாமி தேவஸ்தானத்தில் தீப ஜோதியில் சபரி வார தர்ம சாஸ்தா விசேஷ பூஜை நடைபெறத் திருவருள் கூட்டிவைத்திருப்பதால் ஐயப்ப பக்தர்கள் அனைவரும் ஆலயத்திற்கு சமுகம் தந்து ஐயப்பன் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப் படுகின்றனர்.

**நிகழ்ச்சி நிரல்**

பி. ப. 1½ மணிக்கு பஜனை தொடர்ந்து
3.00 மணிக்கு பூஜைகள் தொடர்ந்து
தீபாராதனை நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

கி. நாராயணக்குருக்கள்
(பிரதம குரு)
சுபம்.

(4211)

### கள்ளச் சந்தையில்

# எரிபொருள் விற்போருக்கு எதிராக செயலகம் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எரிபொருட்கள் கள்ளச் சந்தையில் விற்கப் படுவதை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முதல் யாழ்.செயலக விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகளும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் யாழ். பொலிஸ் நிலைய அதிகாரிகளின் முழு ஒத்துழைப்புடன் இப்பணி முன்னெடுக்கப்படுவதாகவும்,

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அனுமதியின்றி எரிபொருட்கள் விற்பனை செய்யப்படின் அவை பறிமுதல் செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர் நீதியின் முன் நிறுத்தப்படுவார்எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்துடன், இனிவருங் காலத்தில் ப.நோ.கூ.சங்கங்களூடாகவே எரிபொருட்கள் விற்பனை செய்வதெனத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## கார் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

15 இலட்சம் ரூபா பெறுமதியான ரொயாற்றோ கொறில்லா ரக புதிய கார் ஒன்றை கொழும்பு இந்துமாமன்றம் நல்லை ஆதீன முதல்வருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் இக்கார் ஆதீனத்தில் வைத்து முதல்வரிடம் கையளிக்கப் பட்டது.

(உ-3)

### பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பு

## நேர்முகத் தேர்வுக்கு மேலும்நால்வர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வுக்கு மேலும்நால்வர் அழைக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜா தெரிவித்துள்ளார்.

★ இ.இராஜேஸ்வரி இளவாலை வடக்கு

★ ச.பிரமிளா-கரவெட்டி வடக்கு

★ ந.சியாமளா - கோண்டாவில்கிழக்கு

★ ச.கௌசிகா-துன்னாலை கரவெட்டி ஆகியோரே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முக தேர்வு இன்றுபி.ப 1மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது .(உ-19)

## பெப்ரவரி 12இல் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் குழு யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்தைச் சேர்ந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர் குழுவொன்று பெப்ரவரி மாதம்12ஆம்திகதியாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

9பேர் அடங்கிய இக் குழுவினர் ஒருவாரம் இங்கு தங்கியிருந்து பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகளை மேற் கொள்வர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட வேண்டிய தேவை உடையவர்களை யாழ் போதனா வைத்தில் சாலை வெளி நோயாளர் பிரிவில் பதிவு மேற் கொள்ளுமாறு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் அறிவித்துள்ளார். (உ)

## இந்து சாதனம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையினரால் வெளியிடப் படும்'இந்து சாதனம்' மார்கழிமாதஇதழ் வெளியிடப்பட்டுள்ளது.

(செ)

## காப்புறுதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான 2002ஆம் ஆண்டிற்கான காப்புறுதிப் பத்திரம் நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிபர்கள் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. உ-9)

## அடைமழையால் பாதிப்புற்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி புரியக் கோரிக்கை

(மந்திகை)

அண்மையில் பெய்த அடைமழையினால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறைப் பகுதி முகாம்களில் வசித்த மக்களுக்கு படுக்கை விரிப்பு மற்றும் நில விரிப்புகளை வழங்குமாறு பருத்தித்துறைசெஞ்சிலுவைச் சங்கத்தலைவர், சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெருவிலுள்ள சின்னத்தோட்டம் முகாமில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 30பேரும், அந்தோனியார் கோவில் முகாமில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 61பேரும் அடிப்படைவசதிகள் குறைந்த நிலையில் அல்லலற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (உ-23)

## பட்டச் சான்றிதழ் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னுத்துரை தயாளினி என்பவரது பட்டச் சான்றிதழ் கண்டெடுக்கப் பட்டு வலம்புரிஅலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

(ந)

## 12-19ம் திகதி வரை சுவாமி விவேகானந்தரின் ஆன்மீக எழுச்சிவாரம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் ஜயந்தி தினத்தை ஒட்டி இன்று சனிக்கிழமை தொடக்கம் 19ம் திகதி சனிக்கிழமை வரை 'ஆன்மீக எழுச்சி வாரம்' கொண்டாடுவதற்கு ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று எமது சமூகம் தேவையற்ற பொருளாதாரத்தை விரயமாக்கும் சமூகக் கொண்டாட்டங்கள், சமூகச் சீரழிவுகள், சுதேசப் பற்றின்மை, மதமாற்ற நடவடிக்கைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இந்நிலையில் சுவாமி விவேகானந்தரது சிந்தனைகள்மிக எடுத்து அவசியமாகநோக்கப் பட வேண்டும்.

இளைய தலைமுறையினருக்கு உயர் லட்சியமுள்ள உறுதியான எண்ணத்தை விதைத்து, எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதேஇவ்வாரம்அனுஷ்டிக்கப்படுவதன் குறிக்கோளாகும்.

எனவே அனைத்துப் பாடசாலைகளிலும், இவ்வாரத்தில் ஒருநாளை ஜயந்தி தினமாகக் கொண்டாடி, மாணவர்களுக்கு சுவாமியின் வரலாறு சிந்தனை என்பவற்றை தெரியப்படுத்துவது ஆசிரியர்களது தலையாய கடமையாகும்.

பல்கலைக்கழகம், திணைக்களங்கள், சமயநிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இவ்வாரத்தில் ஒரு நாளை சுவாமி விவேகானந்தரின் ஜயந்திதினமாக அனுஷ்டிக்குமாறு ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் கேட்டுள்ளார்கள்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ)

## ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விவலயத்திலுள்ள பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் ஏற்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையினைக் கருத்திற் கொண்டு உயர்தர வகுப்புக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆற்றல் கொண்ட ஓய்வு பெற்ற பயிற்றப் பட்ட ஆங்கில ஆசிரியர்களின் விபரங்கள் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக நியமனம் செய்யப்படும் நோக்கில் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளது

ஓய்வு பெற்ற பயிற்றப் பட்ட ஆங்கில ஆசிரியர்கள் தமது விபரங்களை 31-01-2002ற்கு முன்னர் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய நிர்வாகக் கிளையில் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார்.

## வடமராட்சிப் பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெல்லியடி உடுப்பிட்டி நவிண்டில் புலோலி ஆகிய பகுதிகளில்இந்நோயினால்பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (செ-23)

# நோர்வேயின் முயற்சிக்கு ரவூப்ஹக்கீம் ஆதரவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சரின் தலைமையிலான தூதுக்குழு நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இப் பேச்சு வார்த்தையின் போது அமைச்சர் ரவூப் ஹக்கீம் இனப்பிரச்சினை தீர்வுக்கு நோர்வே அரசு எடுத்து வரும் முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் முஸ்லிம் மக்களின் நலன்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

# சங்கே முழங்கு

ஐயா! சகல பல்கலைக்கழகங்களுக்குமான அனுமதிக் கொள்கையில் 2001ம் ஆண்டு முதல் Zபுள்ளி முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை மூலம் பரீட்சார்த்திகள் தோற்றும் பாடங்களின் மொத்தப்புள்ளிகள் இனிமேல் கவனத்தில் எடுக்கப்படமாட்டாதென்றும் நியம விலகலின் அடிப்படையில் கணிக்கப்பட்ட Z புள்ளிகளே கவனத்தில் கொள்ளப்படும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்படி தீர்மானமானது சர்வதேச நாடுகளில் பல்கலைக்கழகங்கள் அனுமதிக்குப் பின்பற்றும் முறையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய Z புள்ளி அடிப்படையிலான அனுமதி [illegible] நாம் மிகுந்த பாதிப்படைந்துள்ளோம்.

பல்கலைக்கழக அனுமதிக்கு 2001ம் ஆண்டுமுதல் Zபுள்ளி முறையே பயன்படுத்தப்படும் என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தீர்மானம் மிகவும் காலதாமதமான தொன்றாகவே காணப்படுகிறது ஏனெனில் இத் தீர்மானம் மாணவர் சமூகத்தினரான எமக்கு எமது உயர்தரக் கல்வியின் ஆரம்பத்திலேயே தெரிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருப்பின மாணவர்களாகிய நாம் அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க முடியும்.

நாம் அறிந்தவரை இதுவரை காலமும் பல்கலைக்கழக அனுமதி மொத்தப் புள்ளிகளினடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டு வந்துள்ளது.

எனவே எமது மொத்தப்புள்ளிகளை அதிகரிக்க நாம் விவசாயம், நாடகம் அரங்கியல், அளவையிலும் விஞ்ஞானமுறை, அழகியல் பாடங்கள் போன்ற பல்வேறுபட்ட பாடங்களையும் சேர்த்தே படித்து வந்துள்ளோம். இதைப் போலவே ஏனைய துறைகளிலும் காணப்படுகின்றன. மொத்தப் புள்ளிகளை அதிகரிக்க இத்தகைய பாடங்கள் எமக்கு உதவி வந்துள்ளன. ஆனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எழுந்தமானமான இந்த Z புள்ளி முறையானது ஏனைய பாடங்களிலும் மிகுந்த கரிசனை கொண்டு கற்கவும் தயார்படுத்தவும் எவ்வகையிலும் உதவவில்லை.

நடந்து முடிந்த பரீட்சையின் அடிப்படையில்மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எங்களில் பலர் Z புள்ளி முறையால் மிகவும் பின் தங்கியவர்களாக காணப்படுகின்றனர்.

உதாரணமாக 3A பெற்ற் மாணவரின் Z புள்ளி நிலை

6, 14, 37, 93, 100, 102
2AB - 69, 155, 185, 219.
3AB - 46, 48.
A2B - 44, 59, 327, 450, 559, 470.
2AC - 160, 171, 197, 279, 536.
2BC - 61, 729, 806.

மறுபுறத்தில் குறைந்த பெறுபேறுகளைப் பெற்ற பலர் இம்முறை மூலம் உயர்ந்த நிலைபெறுகின்றனர். இந் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் செல்வோமென்ற எதிர்பார்ப்புடனும் கனவுடனும் வாழ்ந்த நாங்கள் அவை பொடிப் பொடியாக உடைந்து போயுள்ள நிலையில் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே இந்த Z புள்ளி முறையானது 2001ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களையே முற்றிலும் பாதிக்கின்றது. இதனைத் தவிர்க்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பது மிக மிக அவசியமாகும்.

**- பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியம்.**

# செய்தித் துளிகள்

## 600 சிறார்கள் பராமரிப்பு

(அரியாலை)

முழங்காவில் காந்தி குரு குலத்தில், போரினால் தாய் தந்தையரை இழந்த சுமார் 600சிறார்கள் பராமரிக்கப் பட்டு வருவதாக விடுதியின் பொறுப்பாளர்எஸ்.சிவஞான சுந்தரம் தெரிவித்தார்.

(உ-225)

## தொடர்பு கொள்ளவும்

(மானிப்பாய்)

ஸ்ரீலங்கா தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படும் மின்னிணைப்பு பயிற்சியில் சான்றிதழ் பெற்றோர், மேலதிக பயிற்சிநெறி யொன்றினை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பெற்றுக் கொள்வதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள கிராமிய தொழிற் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அந்நன் போதனாசிரியர் வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார்.

(செ-120)

## விண்ணப்பம் கோரல்

(மானிப்பாய்)

ஸ்ரீ லங்கா தொழிற்பயிற்சி அதிகார சபை வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக நடத்தவிருக்கும் மரவேலை, மேசன்வேலை பயிற்சி தொழில்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட காலத்திற்கு இடம் பெறும் இப் பயிற்சி நெறிக்கு 16 முதல் 35 வயதிற்கு இடைப்பட்ட எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிக் காலத்தின்போது ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 450 ரூபா வழங்கப்படும். விண்ணப்பங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு முன்பாக இயங்கும் ஸ்ரீலங்கா தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு தபால்மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு அதன் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார். (செ-120)

## விபத்தில் விரல் இழப்பு

(மந்திகை)

அல்வாய் வடக்குப் பகுதியில் அண்மையில்இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய வடபிராந்திய போக்குவரத்துசபைப் பேருந்துச் சாரதி ஒருவர் வலதுகாலில் விரல் ஒன்றை இழந்துள்ளார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கே. அருமைத்துரை என்பவரே இவ்வாறு விபத்தில் விரல் இழந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

## விழுது 2002 நிகழ்வுகள்

(ஈச்சமோட்டை)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் விழுது 2002 நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10. 00 மணிக்கும் மாலை3.00மணிக்கும்இடம் பெறவுள்ளன.

நெல்லியடி ராஜலக்ஷ்மி திரையரங்கில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ''கூடித் துயர் வெல்'' என்ற சிறுவர் நாடகமும் ''ஏகலைவன்'' நாட்டுக் கூத்தும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-59)

## சாந்தனின் நூல்கள்

### அறிமுக அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகதமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் சாந்தனின் கதைத் தொகுதியான ''எழுதப்பட்ட அத்தியாயங்கள்'' ஆங்கிலக் கதைத் தொகுதியான ''அவர்களது உலகங்களில்''..Intheir own Worlds' ஆகிய நூல்களின் அறிமுக அரங்கு இன்று மு.ப 10 மணிக்கு கலாநிதி சி. சிவலிங்கராஜா தலைமையில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், வாழ்த்துரையை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், நூல் அறிமுகவுரையை நடனத்துறைத் தலைவர் சபா.ஜெயராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

விமர்சன உரைகளை, சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா மற்றும் அருட்திரு ஜெயசீலன் அடிகள், வி. பி. சிவநாதன் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (உ)

## பரீட்சை 15 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் தேசிய தராதரப் பத்திரம் ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான, ஆங்கிலம்1பரீட்சைஎதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1. 00மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

## உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை இரு வாரங்களுக்கு அரசு ஒத்திவைத்துள்ளதாக தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

(இ-4)

### விவேகானந்தர் ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரது ஜெயந்திதினம் இன்று சனிக்கிழமை இடம்பெறுவதை ஒட்டி யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் பல ஆன்மீக நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டோர் தெரிவித்தனர்.

(செ-104)

### சாகித்திய விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சாகித்திய விழா காரைநகரில் நடைபெறவுள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. (செ-75)

## குளிரூட்டிய மீன்

(அல்லைப்பிட்டி)

சின்னக் கடை மீன் சந்தையில ஒரு சில மீன் விற்பனையாளர்கள் முதல் நாள் மீனை குளிரூட்டியில் வைத்திருந்து அடுத்த நாள் விற்பனை செய்வதனை அவதானிக்கமுடிகின்றது. (செ-231)

# போரை நிரந்தரமாக நிறுத்தக்கோரி பெண்கள் அமைப்பு அமைதிப்பேரணி

(கொழும்பு)

நாட்டில் யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு பகிரங்க வேண்டுகோளொன்றை அரசாங்கத்துக்கு விடுத்துள்ளது.

யுத்தத்தை நிறுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேக் ஆகியோருக்கு மேற்படி அமைப்பு மகஜர்களை கையளித்துள்ளது.

தமது கோரிக்கையை வலியுறுத்தும் முகமாக இவ்வமைப்பு இன்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவிலிருந்து நோர்வே தூதரகம் வரை அமைதிப் பேரணியொன்றையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. (இ)

# ஆயுதங்களைக் காட்டி பொருட்கள் கொள்ளை

### வட்டுக் கோட்டையில் சம்பவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை புளியடி சந்திக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் நுழைந்த திருடர் கோஷ்டி அங்கிருந்தோரை ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி விட்டு அங்கிருந்த ரீ.வி டெக், துவிச்சக்கர வண்டிகள் இரண்டு ஆகியவற்றைகொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.00மணியளவில் நடைபெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது வீட்டிலுள்ளோர்படம் பார்த்துக் கொண்டிருந்த போது உள்நுழைந்த திருடர் கோஷ்டி ஆயுதங்களைக் காட்டி மிரட்டி விட்டு மேற்படி பொருட்களை திருடிச சென்றுள்ளனர். (செ-216)

## ஐ தே. முன்னணி அரசின்

# மெத்தனப் போக்கு மக்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது

### கண்டிக்கிறது தொ. நு. க. மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

புதிதாகஆட்சியமைத்துள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசானது இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வுகாண மேற்கொள்ளும் முயற்சிகளை தமிழ் மக்கள் முழுமனதுடன் வரவேற்கின்றனர்.

எனினும், மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வுகாணப்படாத நிலையில் இழுத்தடிப்பதானது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பத்திரிகைக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த மாதம் 24 ஆம்திகதி முதல் போரிடும் இரு தரப்பும் பேச்சுக்கு உகந்ததான பதற்றமற்ற சூழலைப்பேணிவருகின்றன.

இருந்த போதும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் புதிய அரசினால் குறைக்கப்படும் அல்லது தீர்க்கப்படும் என எதிர்பார்த்து நிற்கும் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

பேச்சு மூலம் தீர்வு காண்போம் எனக் கூறிக்கொண்டு ஆட்சிப் பீடமேறியுள்ள புதிய அரசானது முதலில் அன்றாடப் பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலம், தமிழ் மக்களின் நம்பிக்கையைக்கட்டியெழுப்ப வேண்டும்.

ஏனெனில், பேச்சு மூலம் காலத்தை இழுத்தடித்து இராணுவத்தைத் தயார் நிலைப்படுத்தி தமிழர் தரப்பை பலவீனப்படுத்த முயன்ற முன்னைய ஆட்சியாளர்களை தமிழ் மக்கள் இலகுவில் மறந்துவிடுவதற்கில்லை.

எனவே, புதிய அரசானது தமிழ் மக்களின் நம்பிக்கையை சிதறடிக்காது கட்டிக்காக்க வேண்டுமாயின்,

- தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகள் மீது அரசு விதித்துள்ள தடையைநீக்கி தமிழ்பிரதேசங்களில்நடமாட அனுமதிக்க வேண்டும்.
- இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள சகலதடைகளும் நீக்கப்படவேண்டும்.
- இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், கைதுகள் போன்ற கெடுபிடிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
- சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டு சிறைகளில் உள்ள அப்பாவி தமிழ்மக்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவதுடன் இவர்கள் கைதுகளை சட்டரீதியாக்கும் அவசரகால, பயங்கரவாத தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.
- வடக்கு கிழக்கு பகுதிகளில் மக்கள் வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள அரச படைகளும், தமிழ் ஆயுதக் குழுக்களும் வெளியேற்றப்பட்டு அவைஉரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுவதுடன் கடல்வலய தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.

இவை போன்ற அன்றாடப் பிரச்சினைகளை உடன் களைந்து விட்டு தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதேஆரோக்கியமானதாக கருதப்படும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## எரிபொருள்

# கள்ளச்சந்தை குறித்து பொதுமக்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விற்பனை நிலையங்களினூடாக கட்டுப்பாட்டு விலைக்குவிநியோகிக்கப்படும் எரிபொருட்கள் கள்ளச் சந்தையைச் சென்றடைவதாகபாதிக்கப்படும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் விற்பனை நிலையங்கள் இவ்வாறு பொறுப்பற்றதனமாககள்ளச் சந்தை வியாபாரிகளிடம் எரிபொருளை விற்றுத் தீர்ப்பதால், அதனைப்பெற காலகடுக்க காத்து நிற்கின்ற தாம் ஏமாற்றத்துடன் திரும்புவதாகவும்,

பின்னர் கள்ளச் சந்தையில் அதிக விலைகொடுத்துவாங்குவதாகவும் மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

(உ-10)

### நிர்வாக சபை தெரிவு

(மந்திகை)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட நடுவர்சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவும் பொதுக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றது தலைவராக பா.நவநீதமணி செயலாளராக அ. அருளானந்தசோதி பொருளாளராக சி.கௌசிகன், உபதலைதராக ரி.அருணகிரிராஜா, உப செயலாளராக யோ.ரஜனிக்காந் ஆகியோரும் ஏழு நிர்வாக உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

# தமிழ்க் குழுக்கள் தம்மிடமுள்ள ஆயுத விபரங்களைக் கையளித்தன

(மட்டக்களப்பு)

மட்டு மாவட்டத்தில் உள்ள ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) ஆகியன தம்வசமுள்ள ஆயுத விபரங்களை மட்டக்களப்புப் பொலிஸாரிடம் நேற்று கையளித்துள்ளனர்.

ஆயுதம் வைத்திருக்கும் தமிழ்க் குழுக்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பொலிஸாரிடம் கையளித்துவிட வேண்டுமென காலக்கெடு விதிக்கப்பட்டதையடுத்தே,

சட்டவிரோத ஆயுதங்கள் எவையும் தம்மிடம் இல்லையெனவும் அரச அனுமதி பெற்ற ஆயுதங்களே தம்மிடமுள்ளதாகவும் கூறி அவற்றின் பட்டியலை மேற்படிகட்சிகள் கையளித்துள்ளதாய் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ரெலோ அமைப்பு தம்மிடம் ஆயுதம் எதுவும் இல்லையெனவும், ஏற்கனவே தம்மிடமிருந்த ஆயுதங்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளது.(உ-7)

## இன்று ஒரு தகவல்

# பாதுகாக்கும் நல்ல முறை

செல்வர் ஒருவர் வெளிநாடு செல்லவேண்டியிருந்தது. தன் இரண்டு நண்பர்களையும் அழைத்த அவர் 'எப்படியும் நான் திரும்பிவர இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகலாம். ஆளுக்கு ஆயிரம் பொற்காசுகள் தருகின்றேன். நான் திரும்பி வந்ததும் என்னிடம் தரவேண்டும் என்றார். நண்பர்களும் அப்படியே செய்வதாகச் சொல்லி அவரிடம் பொற்காசுகளைப் பெற்றார்கள். நான்காண்டுகளுக்குப் பிறகு செல்வர் நாடு திரும்பினார். செல்வரைச் சந்தித்த முதலாவது நண்பன் 'நீ தந்த பொற்காசுகளை அப்படியே பெட்டியில் பூட்டி வைத்திருந்தேன். இதிலிருந்து ஒரு காசைக்கூட நான் தொடவில்லை. நீ சொன்னபடி அப்படியே பாதுகாத்துத் திருப்பித் தந்துள்ளேன்' என்றான்.

அங்கு வெறுங்கையுடன் வந்தான் இரண்டாம் நண்பன். எங்கே என் பொற்காசுகள் என்று கேட்டார் செல்வர். 'நீ தந்த பொற்காசுகளையெல்லாம் பயனுள்ள இடங்களிலெல்லாம் முதலீடு செய்தேன். இப்போது இரண்டாயிரம் பொற்காசுகளுக்கு மேல் அந்தத்தொகை பெருகியிருக்கும். அடுத்தவாரத்தில் அவற்றைத் திரட்டி உன்னிடம் தருகின்றேன்' என்றான் இரண்டாமவன். அவனைக் கட்டித்தழுவிக்கொண்ட செல்வர், 'பொருளை உரிய முறையில் பாதுகாக்கும் முறை தெரிந்தவன் நீதான். இனி நான் எங்கு சென்றாலும் இங்குள்ள என் செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு உன்னுடையது தான்' என்றார். □

பேராசிரியர் எ. சோதி

## சமாதான முயற்சிகளை

# வலுவுள்ளதாக்கும் தார்மீகக் கடமை இந்தியாவுக்கு உண்டு

### வலியுறுத்தி இந்துசமயப் பேரவை வாஜ்பாய்க்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட நோர்வே அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளை வலுவுள்ளதாக்கும் தார்மீகப் பொறுப்பை இந்திய அரசாங்கம் கொண்டுள்ளது.

இச்சமாதானப் பேச்சுவார்த்தையை ஆத்மீக பாரம்பரியம் நிறைந்த தங்கள் திருநாட்டில் நடத்துவதற்கு வேண்டிய சகலவிதமான உதவிகளையும் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்துசமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன், இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய்க்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

இந்த மேலான கண்ணியமான பங்களிப்பை தங்கள் நாடு மேற்கொள்வதன் மூலம் இலங்கை வாழ் இந்துக்களை காப்பாற்றிய பெருமையைத் தேடிக்கொள்வதோடு இலங்கைத் திருநாட்டில் இந்துக்களும் பௌத்தர்களும் அநியாயமாக அழிவதை தடுத்து நிறுத்தியபுண்ணியப்பேற்றை தங்கள் திருநாடு பெற்றுக் கொள்ளும் என்பதையும் தங்களுக்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பன்னெடுங்காலமாக கண்ணீர் தோய்ந்த வாழ்வில் மிதக்கும் இலங்கை தமிழ் மக்களை காப்பாற்ற தங்களுக்கு சகலவிதமான நலன்களையும் ஸ்ரீபார்வதி பரமேஸ்வரன் வழங்கவேண்டுமென பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

# வீதி வியாபாரத்தால் போக்குவரத்து சிரமம்

(அல்லைப்பிட்டி)

யாழ்ப்பாணம்சின்னக்கடை சந்தைக்கு அண்மையில் உள்ள வீதிகளில் நடைபாதை வியாபாரிகளின் வியாபாரத்தால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் இடைஞ்சலை எதிர்நோக்குகின்றன.

இந்நடைபாதை வியாபாரிகள் லொத்தர்குலுக்கல்மூலம் பொருட்களை விற்பனை செய்வதால் அவ்விடத்தில் பொதுமக்கள் குழுமி நிற்கின்றனர். இதனாலேயே போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்படுவதுடன் விபத்துக்களும் சம்பவிக்கின்றன. (செ-231)

# கொடுப்பனவு வழங்கப்படுகிறது

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தசமுர்த்தி அபிவிருத்தித் தாண்டர்களின் கடந்த டிசம்பர் மாதத்திற்குரியகொடுப்பனவுகள் மேற்படி பிரதேச செயலகத்தில் வைத்து தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (செ-120)

# வெற்றிக் கேடயம் சென்.பற்றிக்ஸ் அணிக்கு

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட பாடசாலைகள்கிரிக்கெட் விளையாட்டுச் சங்கம், பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன், முதன்முறையாக நடத்திய 13 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான ஆட்டத்தின், இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை கிரிக்கெட் சங்கத் தலைவர் கே.இராசதுரையின் நெறிப்படுத்தலில் சென் யோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த இறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ்கல்லூரி அணி, அதனைஎதிர்த்துஆடிய யாழ். மத்திய கல்லூரி அணியை ஒரு சுற்றாலும் 3 ஓட்டங்களாலும் தோற்கடித்து வெற்றிக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ஐக்சனும், சிறந்த பந்து வீச்சாளர் ஆக வி. லோட்சனும், சிறந்தபந்து தடுப்பாளராக யோன்சனும் தெரிவு செய்யப் பட்டனர்.

இந்தநிகழ்வில்பிரதம விருந்தினராக யாழ். வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ். இரவிந்திராவும், சிறப்பு விருந்தினராக பனை தென்னைவள முகாமையாளர் கோகுலதாசனும் கலந்து கொண்டனர். (உ-110)

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(ஊர்காவற்றுறை)

தனதுகுழந்தையை கிணற்றுள் வீசிக்கொன்றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட தாய் ஒருவரை 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி பா. பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின் போது அனலைதீவைச் சேர்ந்த பெண் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவார். (செ-75)

## இன்று நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

# மகேஸ்வர சிவாச்சாரியாரின் பீடாரோஹண விழா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியமும் சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடத்தும் அதிவந்தனீய பிரம்மாஸ்ரீ ஜம்புவேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியாரின் பீடாரோஹண விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் தொடக்கவுரையை சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்களும், ஆசியுரைகளை சித்தாந்தபானு பிரம்மஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், சிவாகம கலாநிதி பிரம்மஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருக்கள் ஆகியோரும், வரவேற்புரையை சர்வதேச் இந்துமத குருமார் ஒன்றிய உபதலைவர் பிரம்மஸ்ரீ க. மஹாகணபதீஸ்வரக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் சிறப்புரையாற்றவுள்ளார்.

பீடாதிபதியை, சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் சார்பாக அமைப்பின் பொருளாளர் பிரம்மஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்; பிரம்மஸ்ரீ நாகேந்திர பால சுப்பிரமணியக் குருக்கள ஆகியோர் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் மற்றும் மேலதிக அரசங்க அதிபர் து.வைத்தியலிங்கம், நியந்த்ரிதுணைத் தலைவர் பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர், சிவத் தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி உட்பட மற்றும் பலர் வழங்கவுள்ளனர். (உ)

# பாம்பு தீண்டியது

(மந்திகை)

மிருசுவில் பகுதியிலிருந்து சைக்கிளில் கட்டிவந்த பாளை விறகினை பிரித்தபோது அதனுள்ளிருந்த பாம்பு கடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவிலிலிருந்து இடம் பெயர்ந்து துன்னாலை வேம்படியில் வசித்துவரும் இரத்தினசாமி தங்கவடிவேலு (வயது-32) என்பவரே கடியுண்ட நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (செ-23)

# வெங்காயச் செய்கை

(புத்தூர்)

புத்தூர் கிழக்குப் பகுதியில் பெருமளவு விவசாயிகள்வெங்காயச் செய்கையில் நாட்டம் காட்டி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (உ-235)

# திருவாசகம் முற்றோதல்

(நீர்வேலி)

நீர்வேலி கந்தசுவாமிகோவிலில் நாளைஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவாசக முற்றோதல்நிகழ்வு இடம் பெறவுள்ளது. (செ-234)

# ஒன்று கூடல்

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் வருடாந்தஒன்றுகூடல்நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு பணிமனை விரிவுரை மண்டபத்தில் சுகாதார வைத்திய அதிகாரி ஞானசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-23)

# கராத்தே ஒன்றியம் அண்மையில் உருவாக்கம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலத்தின் பின்னர் யாழ். குடாநாட்டில் கராத்தே ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று சஞ்சய் ரஞ்சித்சைலேந்திர குமார் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

பெருமளவு கராத்தே பயிலுநர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கராத்தேக் கலையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் இனிமேல் மேற்படி ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன. (உ-19-9)

# களுத்துறை கைதிகளை மட்டு எம்.பி சந்திப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜி.தங்கவடிவேல்நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு, விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மைவிடுதலைசெய்யவேண்டும் அல்லது வழக்குத் தாக்கல் செய்து பிணையில் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென கைதிகள் தம்மிடம் கோரிக்கை விடுத்திருப்பதாய் தங்க வடிவேல்தெரிவித்தார். ((இ-4

## ஆச்சிரமத்தில் 40 பிள்ளைகள் பராமரிப்பு

(அரியாலை)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வரும் மகாதேவா ஆச்சிரமத்தில் பெற்றோரை இழந்த 40பிள்ளைகள் சைவ அறிவு,தமிழ்ப்பண்பாடு மிக்கவர்களாய் விளங்கும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். (உ-225)

## பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடப்பு வருடத்திற்கான நிர்வாக சபைத்தெரிவும்எதிர் வரும் 23ஆம் திகதி புதன் கிழமை பி.ப.1.00மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நலன்புரிச் சங்கத் தலைவர் மு.பாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-120)

## இந்து கலாசார அமைச்சு அலுவலகம்

# செயலக கட்டடத்தில் 18ஆம்திகதிமுதல்இயங்கும்?

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சின் யாழ் அலுவலகம், எதிர் வரும் 18 ஆம் திகதி முதல் யாழ். செயலகக்கட்டடத்தில் இயங்கும் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக் கட்டடத்தின் திருத்த வேலைகள் யாவும் தற்போது முடிவடைந்துள்ளதாகவும் அமைச்சர் தி. மகேஸ்வரனே இக் கட்டடத்தினை திறந்து வைப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# ஆயிரம்பேர் தலைமறைவு

(கொழும்பு)

நாட்டின் முன்னைய அரசின் ஆட்சியில்இருந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் அதிகாரிகளுடன் ஊழல் செயலில் ஈடுபட்டுவந்த ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸார் தலைமறைவாகியுள்ளனர். (உ-7)

## சிந்தனைக்கு விருந்து

**இங்கிலிசுப் பா(ட்டு)ப் பாடுகிறாள்!**

அந்நியநாட் டிற்பிறந்த உன்அண்ணன் செல்வமகன்
இன்பத் தமிழிலுரை ஆடுகிறான் - உன்மகளோ
'டாடிமம்மி' சொல்லி'இன்ரர் நாஷனல்கூல்' சென்றங்கு
பாடுகிறாள் இங்கிலிசுப் பாட்டு!

'பழையவன்'

இந்து சமய கலாசார அமைச்சின்
அனுசரணையுடன்
இந்து சமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்
நடாத்தும்

# பொங்கல் விழா-2002

**யாழ். மாவட்டம்**

காலம்: 14-01-2002 திங்கட்கிழமை

இடம்: நல்லூர் கந்தசுவாமி கோவில்
(பொங்கல் பூஜை வழிபாடு)
யா-நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்
(பாரம்பரிய விளையாட்டுக்கள்)
நல்லூர் துர்க்கா மணிமண்டபம்
(கலை நிகழ்வுகள்)

தலைவர்: திரு. து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

பிரதம விருந்தினர்:

**உயர்திரு. தி. மகேஸ்வரன் அவர்கள்**
கௌரவ அமைச்சர் இந்து கலாசார அமைச்சு

## நிகழ்ச்சி நிரல்கள்

**காலை நிகழ்வுகள்:-**

7?30 பொங்கல் பூஜை வழிபாடு
நல்லூர் கந்தசுவாமி கோயில்

8.00 பாரம்பரிய விளையாட்டுக்கள்
நல்லூர்மங்கையற்கரசி வித்தியாலய விளையாட்டு மைதானம்.
சிலம்பு-வடமயிலை இராசதுரை குழுவினர், வலி வடக்கு
கரலாக்கட்டை-பருத்தியூர் மகாதேவாகுழுவினர்
கபடி-தெல்லிப்பளை பிரிவு விளையாட்டு வீரர்கள் எதிர் யாழ்ப்பாண பிரிவு விளையாட்டு வீரர்கள்.
தாச்சி-நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம்.

**மாலை நிகழ்வுகள்-**

**நல்லூர் துர்க்கா மணிமண்டபம்**

2.00 மங்கல விளக்கேற்றல்

2.10 தமிழ்த் தாய் வாழ்த்து
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவிகள்

2.20 மங்கல இசை
என். ஆர். கே. இரத்தினகுமார் குழுவினர்

2.40 தலைமையுரை
திரு. து. வைத்திலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர் யாழ். மாவட்டம்

2.50 யாழ். பல்கலைக்கழக நுண்கலைக்கழகம் வழங்கும் பொங்கல் இசை நடன விருந்து
பாட்டு - திரு. ந. வி. மு. நவரத்தினம்
வயலின் - திரு. உ. இராதாகிருஸ்ணன்

# சட்டவிரோதமாக பிரிட்டன் புகமுயன்ற 11 பேர் கைது

## இவர்களில் 6 பேர் இலங்கையராம்

(லண்டன்)

பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 சட்டவிரோத குடியேற்றவாதிகளை டச்சுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில்6 பேர் இலங்கையர் என தெரிவிக்கப்படுகிறது.

பொருட்கள் கொண்டு செல்லும் பாரிய கொள்கலன் ஒன்றின் மூலமே இவர்கள் நாடு கடத்தப்பட்டதாகவும் பிறநாடுகளுக்குசட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தும் தனியார் நிறுவனம் ஒன்றே இச்செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கொள்கலன்ஒன்றை லொறி ஒன்று முந்திச் சென்றவேளை கொள்கலனில் மனிதக்குரல் கேட்பதாக பொலிஸாருக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் கொள்கலனை இடைமறித்து சோதனை செய்து அதில் இருந்தவர்களை மீட்டு கைது செய்துள்ளனர்.

மேற்படி கொள்கலன் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட இருந்தமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

(உ-7)

# இந்தியாவில் பயங்கரவாதத்தை ஒழிக்க பாகிஸ்தான் உதவும்

## அமெரிக்க ஜனாதிபதி உறுதி

(வாஷிங்டன்)

இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்துக் கட்டுவதற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பாரென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் பியூ புஷ் உறுதியாக கூறியுள்ளார்.

6 நாள் அமெரிக்க விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானியை ஜோர்ஜ்புஷ் சந்தித்து உரையாடிய தன் போதே இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பாகிஸ்தான் உதவியது போன்று இந்தியாவில்பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு பாகிஸ்தான் அதிபர்உதவுவாரென்றும் அவர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக பாகிஸ்தான் கூறுவதை அது செயலிலும் காட்ட வேண்டுமென்று அத்வானி அமெரிக்க அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அத்வானி அமெரிக்க புலனாய்வு அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# உலக தரிசனம்

**பயங்கரவாதத்திற்கு எதிரான போர்**

# ஈரானை துணைக்கு அழைக்கிறார் அமெரிக்க அதிபர் டபிள்யு புஷ்

(தெஹ்ரான்)

பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு ஈரான் தனது பங்களிப்பை வழங்க வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கோரியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கா தலைமையிலான தாக்குதலினால் ஒஸாமா பின்லேடனும் அல்கெய்டா

டனும் அப்பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடனும் இணைந்து பணியாற்ற தாம் விரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## கைதான தலிபான்கள் மனிதாபிமானமாக நடத்தப்படுகின்றனர்

(வாஷிங்டன்)

னுவம் மேற்படி கைதிகளை

| | | |
|---|---|---|
| வயலின் | - | திரு. உ. இராதாகிருஸ்ணன் |
| கடம் | - | திரு. சி. மகேந்திரன் |
| கஞ்சிரா | - | திரு. எம். சிதம்பரநாதர் |
| முகர்சிங் | - | திரு. எஸ். ரமணன் |
| தம்புரா | - | திரு. ந. பரந்தாமன் |

3.20 நடன விருந்து நெறியாள்கை
திருமதி கிருஷாந்தி இரவீந்திரா
இறைபுகழ் ஆடல்
பொங்குபுகழ் நாட்டுவளம்
கதன குதூகல ஆடல்

4.20 பிரதம விருந்தினர் உரை
இந்து சமய கலாசார அமைச்சர்
கௌரவ தி. மகேஸ்வரன் அவர்கள்

4.30 கவியரங்கம்
'தைமகளேநீபிறந்து தமிழருக்குஎன்னசெய்வாய்'
தலைவர் மதுரைகவி காரைஎம். பி. அருளானந்தம்
பங்கேற்கும் கவிஞர்கள்

| | |
|---|---|
| கிராமத்துக்குயில் | ஓவியா றெஜீபன் |
| கவிஞர் | த. ஜெயசிலன் |
| கவிஞர் | ச. முகுந்தன் |
| கவிஞர் | கு. புரந்தரன் |
| கவிஞர் | தி. திருக்குமரன் |
| கவிஞர் | த. ஜெசீதன் |

5.10 நன்றியுரை
திரு. பி. செந்தில்நந்தனன்
பிரதேச செயலர் யாழ்ப்பாணம்

5.15 பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
வழங்கும்
''வள்ளி திருமணம்'' இசை நாடகம்

இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலகம்,**
விழாக் குழுவினர்
யாழ்ப்பாணம்.

(C-3259)


பின்லேடனும் அல்கெய்டா அமைப்பினரும் ஈரானுக்கு தப்பி யோடியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இதன் பின்னணியிலேயே ஓஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பினர் ஈரானுக்குள் தப்பிவந்திருந்தால் அவர்களை ஈரான் தம்மிடம் ஒப்படைக்குமென தான் நம்புவதாக அதிபர் புஷ்தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானை ஸ்திரப்படுத்துவதற்கு ஈரானு

(வாஷிங்டன்)

கியூபாவில் அமைந்துள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தின் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அல்கெய்டா, மற்றும் தலிபான் கைதிகளை அமெரிக்காநீதியாக நடத்திவருகிறதென்று மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மேலும், மனிதாபிமானமாகவும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவும்அமெரிக்க இராணுவம் மேற்படி கைதிகளை நடத்தி வருகிற தென்பதை கைதிகள் உறுதி செய்ய வேண்டுமென மனித உரிமை அமைப்புக்கள் கைதிகளை கேட்டுள்ளன.

டோறா போறோவில்கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட 20 தலிபான்மற்றும் அல்கெய்டா உறுப்பினரை நேற்று முன்தினம் கியூபா சிறைக்குவிசேட இராணுவப் பிரிவின் விசாரணைக் குழு அழைத்துச் சென்றது.

கைதிகள் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளை துன்புறுத்தப் பட்டுள்ளார்கள் என்று பத்திரிகைகளிலும் வேறுஊடகங்களிலும்செதிய்கள் பரப்பப்பட்டதுகுறிப்பிடத்தக்கது.

(உ-7)

# இந்தியாவின்பொறுமையை சோதிக்கின்றது பாகிஸ்தான்

## அத்வானி சீற்றம்

(புதுடில்லி)

பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இது வரை எந்தவித நடவடிக்கையையும் எடுக்காததனால் இந்தியா பொறுமையிழந்து சென்று கொண்டிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்தவாறு இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பாக அமெரிக்க அதிபருக்கு திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாகவும் இது தொடர்பாக இன்னும் ஒரு வார காலத்திற்குள் பாகிஸ்தான் தகுந்த நடவடிக்கை எடுக்குமெனஅமெரிக்கஅதிபர் தன்னிடம் தெரிவித்ததாகவும் பேட்டியின் போது அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-5)

## பாதுகாப்பு பலம்

(பொஹோரா)

கொலம்பியாவின் எல்லைப் புறத்தில் ஈக்குவடோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகளை 48மணிநேரத்திற்குள் வெளியேறும்படி கொலம்பியா எச்சரித்ததன் விளைவாக பெரும் எண்ணிக்கை

(2-ம் பக்கம் பார்க்க)

# ஏழைகளுக்குதவிடும் சேவையே இறைசேவை
# என்ற சுவாமி விவேகானந்தரின் சீரிய தத்துவம்

காலவெள்ளோட்டத்தில் சில மனிதர்களின் சிந்தனை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உலகிடை வலம் வரும். இந்த வரிசையில் சுவாமி விவேகானந்தர் விட்டுச் சென்ற சிந்தனைகள் உலகிடை பலவித தோற்றம் எடுத்ததில் வியப்பேதும் இல்லை. சுவாமி விவேகானந்தரின்படங்களில், ஒருபடத்தில் ஒரு கைப்பிரம்புடன் காணப்படுகிறார். இந்தத் தடியுடன் இந்தியா முழுவதும் கால்நடையாக வந்த பெருமை இந்த தனிமனிதருக்கே உண்டு இந்தப்பயணத்தில் இந்திய நாட்டு மக்கள் படும் அல்லல் கண்டு ஏங்கினார். இவர்களுக்கு யான் எவ்வாறு உதவ முடியும் என்று மனம் உருகினார். இவரது எண்ண அலைகள் இவர் வாழ்ந்த காலத்தில் மாறுதலைக் கொண்டு வந்தது. ஆனால் இவர் மறைந்த பின்பு காட்டில் ஏற்பட்ட தீபோல் இவரது கருத்துக்களின்வெளிப்பாடுதாய் நாட்டில் மட்டுமல்ல உலகிடை பரவி விட்டது.

**சுவாமி விவேகானந்தரின் தேசிய இளைஞர் தினம் இன்றாகும்**

சேவையே தேவை

சுவாமி விவேகானந்தர் தான் முதன்முதலில் மனிதனிடம் கடவுளைக் காணுங்கள் என்றார். மனிதன் தரித்திரநாராயணனது சொரூபம். ஆகவே 'மனிதனுக்கு ஆற்றும்சேவை நாராயணனுக்குப் போய் சேரும்' என்றார். 'எனக்குத் தெரிந்த கடவுள் ஏழையே சேவை செய்யும் பொழுது கடவுள் ரூபத்தில் இருக்கும் சிவனுக்கு நாம் சேவை செய்கிறோம் என்ற கருத்தில் சேவை புரிந்தால் அது ஜீவசேவையாக பரிணமிக்கும். அப்படிப்பட்ட சேவையால் மனித சமுதாயம் மேன்மை பெறும். சேவை செய்பவனுக்கு அகங்காரம் ஏற்பட வாய்ப்பு இருக்காது என்பார். சும்மாவெறும் அனாதை விடுதிகள், அன்னதான மடங்கள் இவைகளை ஸ்தாபிப்பதால் பயன் ஒன்றும் ஆவதில்லை. இறைவன் பெயரால் இதனை செய்கிறோம் என்ற கருத்துப்பட செயல்படும்பொழுது இச்சேவையால் பயன் பெறுபவர்கள் உயர்த்தப்படுகிறார்கள். சேவை செய்யும் தொண்டனுக்கு மனதில் பண்புகள் வளரும். வெறும் சோற்றுக்கு கையேந்தும் சமுதாயம் ஆக இருக்காது திக்கற்றவர்கள் தாங்களும் சிறிது முயற்சி செய்ய வேண்டும் என்பதை சுவாமி விவேகானந்தர் பெரிதும் விரும்பினார் பிரபலமான போட்கார் உற்பத்தியாளர் தாம் பெற்ற செல்வத்தில் ஒரு பகுதியை மக்களுக்கு ஏன் செலவிடவில்லை என்பதை பலர் குறை கூறினர். சுவாமி விவேகானந்தரின் கருத்துப் படி ஹென்றி போட் திரும்பவும் மோட்டார் கார் உற்பத்திக்கேமீண்டும் மீண்டும் லாபத்தை பயன்படுத்தினார். அதனால் பல பேருக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்தார்.

ஏழைகளுக்கு உதவுதல்

இதுதான் சுவாமி விவேகானந்தரின் சமய சீர் திருத்தச் செயல் ஔவையாரின் 'ஏற்பது இகழ்ச்சி' என்ற வாக்கியத்தின் தன்மையை நாம் இங்கு திரும்பவும் உணர வைத்து விட்டார் சுவாமிஜி அதே நேரத்தில் 1894-1895 வெளிநாட்டிலிருந்துகொண்டு சுவாமி விவேகானந்தர் தனது சீடர்களுக்கு எழுதிய கடிதத்தில் 'எவன் ஏழைகளின் துயர் துடைக்க முயற்சிக்கா விட்டால் அவனை நான் துரோகி என்பேன். மனிதன தான் உயர்ந்த கடவுள். திக்கற்ற ஏழைகளை உயர்த்துபவன் மோட்சத்தை அடைவான். இதைத் தவிர வேறு கடவுள் இல்லை' என்று எழுதினார்.

## சுவாமி சித்ரூபானந்தா

இந்த அடிப்படை தத்துவம் காரணமாக இயற்கையின்சீற்றத்தால் புயல், வெள்ளப் பெருக்கு ஏற்படும் பொழுது பாதிக்கப் பட்ட மக்கள் ராமகிருஷ்ண மிஷனை அணுகி ஆறுதல் பெறுவதை நாம் அடிக்கடி இந்தியாவில் பல மாநிலங்களில்கண்டுள்ளோம், ஆந்திராவில் புயலால் வீடு இழந்த மக்களுக்கு ஆயிரம் வீடுகளைராமகிருஸ்ண மிஷன் கட்டிக் கொடுத்துள்ளது. இலங்கையில் ஏற்பட்ட 1983 இனக்கலவரத்தில் இந்தியாவுக்கு ஓடிய தமிழ் மக்களின் இன்னல்களில்பங் கெடுத்திருக்கிறது. இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் முகாமில் பலஇலட்சக்கணக்கான பணம் செலவழித்து ராமகிருஷ்ண மிஷன்சுவாமிகள் தங்கிசேவை புரிந்ததை அடியேன் அங்கு சென்று ஒரு வாரம் தங்கியிருந்து அனுபவம் பெற்றேன்,

சுவாமி விவேகானந்தரின் இந்த சேவையின் எண்ணக் குவியலின் சுடர்-ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பல பிரிவுகளாக பல பெயர்களுடன்துயர் துடைப்புக்கான பணிகள் நடைபெறுவதை நாம் யாவரும் கண் கூடாகக் கண்டும் அனுபவித்து வருகின்றோம்.

வளம் உள்ளநாடுகள், வளம் குறைந்த நாட்டு மக்களுக்கு [illegible] நாம்அனுபவித்து வருகின்றோம்: உலகிடையே சேவையின் தத்துவத்தைபரப்பிய பெருமை சுவாமி விவேகானந்தருக்கே உரியது, யேசு பெருமான் 'எனது மக்களுக்கு செய்யும்சேவை எனக்கேசெய்யப்பட்ட சேவையாக கருதுவாயாக, என்றார்.

இந்தக் கொள்கையை அமெரிக்காவில் நடந்த சர்வ மத மகாநாட்டில் கூடபேசியிருக்கிறார், மதத்தின் பெயரால் சண்டை வேண்டாம், ஒவ்வொருவரும் தம் தம் மதத்தை அனுஷ்டியுங்கள், ஆறுகள் பல இடங்களில் ஊற்று எடுத்து இறுதியில்கடலில்சங்கமிப்பதுபோல் எல்லா மதங்களும் ஏகனான இறைவனையே சேரும் என்றார். அதே நேரம் இந்தியாவுக்கு தற்சமயம் தேவையானது உணவு. ஏழைகள் துயர் தீர்க்கஇதனை அனுப்புங்கள். சமயம் நிறைய பரந்து இந்தியாவில் இருக்கிறது என்றார்.

சுவாமி விவேகானந்தரின் அபிலாஷைகளை பூர்த்திசெய்வதில்நாம் பெரும்பங்குஆற்ற வேண்டும். இதுதான்நாம் சுவாமி விவேகானந்தருக்கு இப்புனித நன்னாளில் செய்யக்கூடிய கைமாறு.

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கைத் திருமுறை மன்றத்தின், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7.00மணிக்கு 'வலம்புரி' பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையுடன் திருவாசகமுற்றோதல்நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ)

## இராசி பலன்

12. 1. 2002
(மார்கழி 28, சனி)
சதுர்த்தசி பி.ப. 6.38 வரை
மூலம் பி.ப. 1.13 வரை
ராகுகாலம் - 9.33 -11.03
சுபநேரம் - 3.33 - 5.03
சித்தம்

**மேடம்**
மனச் சஞ்சலம், கட்டுப்பாடு, காரிய தாமதம், நிலை மாற்றம்.

**இடபம்**
பிரியம், உறவினர் வெறுப்பு, எதிர்பாராத பிரச்சினை, போசன சுகம்.

**மிதுனம்**
முயற்சி கைகூடும், திடீர் பயணம், நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை.

**கடகம்**
சந்தோசமான சம்பவம், தொழில் நன்மை, தன வரவு, ஆரோக்கிய நிலை.

**சிங்கம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய தாமதம், ரோகம்.

**கன்னி**
கல்விச் சிறப்பு, அற்பர் உறவு, துக்கம், முயற்சி தாமதம்.

**துலாம்**
சகோதரர் உதவி, பிரயாண நன்மை, அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை.

**விருச்சிகம்**
வாக்கு கலகம், காரிய தாமதம், வீண் கவலை, குடும்ப சுகம்.

**தனுசு**
ஜனவசியம், போசனசுகம், காரியம் கைகூடும், குடும்ப சுகம்.

**மகரம்**
பிரயாணம், உணர்ச்சிவசப்படல், தந்தை வழி உறவு, சொத்துக்களால் நன்மை.

**கும்பம்**
கீர்த்தி, மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**மீனம்**
அதிகாரம், தொழில் விருத்தி, பிறர் உதவி, நல்ல செய்தி.

வளவன்

# சமகாலச் சிறுவர்களில் அனேகமானவர்கள்
# ஆயுதப் பிணக்குகளினால் பாதிப்புற்றவர்களே.

ஜே. தற்பரன்

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் சமவாயத்தினைத் தாமும் ஏற்று அவற்றில்கூறப்பட்டுள்ள விடயங்களினை அமுல்படுத்துவதாக ஏற்றுக் கொண்டதனடிப்படையில் அவற்றின் நடைமுறைகுறித்து ஆராயவென ஐ.நா சபையிலிருந்து இலங்கை வந்திருந்த 'ஓலறா ஒட்டுணு' அவர்களது கருத்துக்களினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு அமைப்புக்கள் சேர்ந்து ஆக்கப்பணிக்கு ஓர் அன்பான அழைப்பு எனும் நிகழ்வினை இலங்கையில் ஆயுதப்பிணக்கினால் பாதிப்புற்ற பிள்ளைகளது உரிமைகளினை பிரசாரம் செய்வதனூடாக முன்னேற்றுவதற்கும்பேணிப்பாதுகாக்கவும் செயற்படுத்தலாயினர். அந்தவகையில் பிள்ளைகள் 'சமாதானத்தின் சரணாலயங்கள்' எனும் விடயம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) தமது அலுவலகத்தில் கடந்த வாரம் ஓர் கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. பல்வேறு அமைப்பு பிரதிநிதிகளும்பங்குபற்றியிருந்த மேற்படி நிகழ்வானது மாவட்ட இணைப்பாளர் இமர் கிறாங்கிள் அவர்களதுதலைமையில் நடைபெற்றது. சி.பா (ஐ.இ) தகவல்பிரிவைச் சேர்ந்த லயனல் அமரக்கோன் கருத்துக்களினைவழங்கினார்.

சமாதானத்தின் சரணாலயங்கள்

சிறுவர்கள் தமது உரிமைகளினைஅனுபவிக்கும் வண்ணம் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஆயுதப்பிணக்கினால் அவதியுறும் பிள்ளைகளினது உரிமைகளினைப் பாதுகாப்பதில் எமக்குள்ளஉரிமைகளினைத்தனித்தனியாகவோ ஒருமித்தோ நிறைவேற்றுதல் வேண்டும் என வலியுறுத்துகின்றது. அத்தோடு மக்கள் தமக்கிடையே பல்வேறு விடயங்களில் பல்வேறு கருத்துக்களினைக் கொண்டிருந்தாலும் ஆயுதப் பிணக்கினால் அவதியுறும்பிள்ளைகளினைப் பொறுத்தவரையில்' அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்களே' என்கின்றஒருமித்த கருத்தையே கொண்டிருக்கின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வகையிலேயே நாட்டின்நிலையைத் தீர்மானிக்கும் அமைப்புக்கள், குடும்ப சமூக கட்டமைப்புக்கள் சிறுவர்களினை சமாதானத்தின் கருவூலங்களாக்கொண்டுள்ளன. எனவே தான்சிறுவர் சமாதானத்தின் சரணாலயங்கள் எனக் கொள்ளப்படுகின்றது.

சமகாலநிலவைரம்

இலங்கையின்வடக்கு. கிழக்கு பகுதியில் அநேகமான சிறுவர்கள் ஏதோ ஒரு வகையில் நெருக்கடி ஆயுதப்பிணக்குகளினால் நேரடியாகவோமறைமுகமாகவோ பாதிப்படைந்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் நாடு முழுவதிலும் நாளுக்கு நாள் இவ்வகையில் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் சிறார்களது எண்ணிக்கைஅதிகரித்து வருகின்றது. உலகளாவிய ரீதியில் நோக்கும் போது ஏறத்தாழ 20 மில்லியன் சிறார் இடம்பெயர்ந்த நிலையிலும், 1 மில்லியன் சிறுவர் அனாதைகளாக்கப்பட்டும்; 10 மில்லியனுக்கும் அதிகமானோர் மனோவியற் பாதிப்புக்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இவை மட்டுமன்றி வருடாந்தம் 800 க்கும் அதிகமான சிறுவர்கள் வெடிபொருட்களினால்மரணமடைகின்றனர். இவை நெருக்கடி மற்றும் ஆயுதப்பிணக்கினால் விளைவும் பேராபத்துக்களாகக் கொள்ளலாம். இவைதவிர ஆங்காங்கு நடைபெறும் யுத்தங்களினால்மரணமடைவோரில் பத்தில் ஒன்பது பங்கினர் சாதாரண மக்கள்என்பதுடன் இதில் அரைப்பங்கினர் சிறுவர் மற்றும் பெண்கள் என்பது வேதனை தரத்தக்க அம்சமாகும். உலக அரங்கு இவ்வாறிருக்க இலங்கை நிலவரத்தினை நோக்கும் போதுஇங்கு சமகாலத்தில் உள்ள அனைத்துச் சிறுவர்களுமே தமது சிறுவர்பராயத்தினைச்தொலைத்தவர்களாகவேகாணப்படுகின்றனர். 18 வயதுக்கு உட்பட்டவர்களே சிறுவர்கள் எனக் கொள்வதனாலும்; இலங்கையில் யுத்தமானதுஆரம்பிக்கப்பட்டு 18 வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும்; யுத்தம் நேரடியாகவோ மறைமுகமாகவோ அனைவரினையும் பாதிக்கின்றது எந்த வகையிலும் மேற்படி கூற்றானதுஏற்றுக் கொள்ளக் கூடியதே இலங்கையில் 270000 ற்கும் மேற்பட்ட சிறார்கள் உள்ளூரில் இடம்பெயர்ந்த நிலையிலும் 60000 ற்கும் அதிகமானோர் தமது வாழ்க்கையைத் தொலைத்தவர்களாகவும் 10000 ற்கும் மேற்பட்ட சிறார் தமது பெற்றோர்கள் இருவரையும் தவறவிட்ட நிலைமையிலும் வாழ்கின்றனர் ஏறத்தாழ 40 வீதமான சிறுவர்கள் கல்வி கற்கும் வயதில் பாடசாலைக்குச் செல்லாத நிலையிலும் காணப்படுகின்றனர்.

இலங்கையில் அநேகமாக அனைத்துப் பிள்ளைகளுமே பயத்தையும் சஞ்சலத்தையும் அனுபவித்துள்ளனர். சிலர் குரூரச் செயல்களினை நேரடியாகவே கண்டிருக்கின்றார்கள். இந்நிலை வடக்கிலும்-கிழக்கிலும் தொடரும் இடம்பெயர்வு, போக்குவரத்துச் சீரின்மை போன்றகாரணிகளினால் மிகவும் மோசமாக உள்ளன. அரசும் மற்றும் அமைப்புக்களும் சில உதவிகளினை வழங்கி வந்த, வருகின்ற பொழுதிலும் அவை பல்வேறு இடையூறுகளினால் தாமதமாகவேஉரிய இடத்திற்குசென்றடைகின்றது. இதனாலோ என்னவோ பிள்ளைகள் பிணக்கைத் தவிர உலகில் வேறெதுவும் இல்லை என்ற எண்ணத்தில் இனவாரியான சிந்தனையினையும், போர்க்குணத்தையும் கொண்டவர்களாக வாழ்ந்து விடுகின்றனர். இவர்களில்சிலர்தீவிரமாகவே பிணக்கில் இறங்கி விடுகின்றனர்.

இந்நிலைமைக்கான காரணம்

அனைத்துக்குமே காரணமென நாம் அரசையும்மற்றும் அமைப்புக்களினையும் காரணம் காட்டினாலும் இவற்றினிடையே பல்வேறு காரணிகள் உள்ளன. எம்மில் பலரே பாரதூரமான மனித உரிமை மீறல் எனக்கொள்ளத்தக்க சிறுவர் பராயத்தினைப் பழிப்பது; ஆயுதப் பிணக்கினால் அவதியுறும் பிள்ளை தனது கவலை மறக்க விளையாடவோ, களிப்பாகஇருக்கவோ தோழமை பூணவோ அவகாசங்கள் வழங்காமலிருப்பது; சமூகக் கட்டமைப்புக்கள் சீர்கெட்டமை, உடல், உளஉணர்வார்ந்த, ஒழுக்க, விவேக. சமூக, ஆத்மார்த்த வளர்ச்சிக்கு அடிப்படை அம்சங்களாகவுள்ள மனித உறவுகள் தறிகெட்டுப்போனமை, சிதறுண்டு போனமை என காரணிகள் எம்மிடையே தானுள்ளன. இவற்றுக்கெல்லாம் அரசோ அன்றி பிற அரசசார்பற்றஅமைப்புக்களோவிடை, தீர்வுகாணமுடியாது. எனவே எம்மிடையேஎமதுகட்டமைப்புக்களினிடையே ஒரு விதமன

(2ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லிணக்கச் செயற்பாடுகளை பாராட்டி மண்டேலா கடிதம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கு இலங்கைப் பிரதமர் எடுத்துள்ள பலவாறான நல்லிணக்கச்செயற்பாடுகளையும் தான் வரவேற்பதாக தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பும் அரசின் மோதல் தவிர்ப்பும் மிகவும் வரவேற்பதற்குரிய விடயங்களாகும். இதனை இருதரப்பும்சாதகமாகப் பயன் படுத்த வேண்டும்.

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா வாழ்க்கை வரலாறு சம்பந்தப் பட்ட சிசில் குணேந்திரா இயக்கும் மண்டேலா நாடக விழாவில் இக்கடிதம் வாசிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந் நிகழ்வில் வெளி விவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-7)




## தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டி மீண்டும் ஒத்திவைப்பு

(இஸ்லாமபாத்)

எதிர்வரும் மார்ச்மாதம் பாகிஸ்தானில் நடைபெறவிருந்த 9வது தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெறுவதாக இருந்தஇப் போட்டிகள் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற யுத்தம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தன.

தற்போது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான முறுகல் நிலை காரணமாக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு 14 மாத சிறைத் தண்டனை

(மந்திகை)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்த பெண் ஒருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 14மாத சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த நற்குணராஜா மணிமேகலை என்பவருக்கே இத் தண்டனை வழங்கப்பட்டது. மதுவரித் திணைக்களஅதிகாரி மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது இப் பெண்ணிடம் கசிப்பு காய்ச்சுவதற்குரிய உபகரணங்கள் மற்றும் கோடாஎன்பன கைப்பற்றப் பட்டன.

சட்டவிரோதமாகா கோடா வைத்திருந்தமைக்காக 8மாதங்களும், கசிப்பு வைத்திருந்தமைக்காக 4மாதங்களும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் வைத்திருந்தமைக்காக 2 மாதங்களும் இவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

((செ- 23)

## மதுரைப் பொலிஸாரால் இலங்கையர் மூவர் கைது

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வெளிநாடு செல்வதற்கு ஒருவருக்குப் போலியான பொலிஸ் அத்தாட்சிப்பத்திரமொன்றை தயாரித்துவழங்கியதன்பேரில் மூன்று இலங்கை அகதிகளை மதுரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வெளியேறுவதற்கு சந்தேகநபர் சமர்ப்பித்தபொலிஸ் அத்தாட்சிப் பத்திரத்தின்மீதுசந்தேகங் கொண்ட மும்பைப் பொலிசார் நெடுந்தீவைச் சேர்ந்த சதானந்தன் என்பவரையும் இவருக்கு ஒத்தாசையாக செயற்பட்டு மதுரைமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்திவாரியின் கையொப்பத்தை போலியாக இட்ட வேறு இருவரையும் கைது செய்துள்ளனர்.

மூவரும் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

## அவசரகாலசட்டம் அமுலில் இல்லை அத்தியாவசிய சேவைகள் நாயகம் பதவி செயலிழந்துவிட்டது

### பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகள் நாயகம் என்னும்பதவி அவசர காலச்சட்டவிதிகளின் கீழ் உருவாக்கப்பட்டது இப்பொழுது அவசர காலச்சட்ட விதிகள் அமுலில் இல்லாததால் இப்பதவியும் செயலிழந்து விட்டது இதனால் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தவை தவிர்ந்த ஏனைய பொருட்கள் தைப் பொங்கல் தினத்திற்கு மறுநாள் தொடங்கி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு தடங்கலின்றி அனுப்பப் படும்.

இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு மீளக்குடிஏற்ற அமைச்சருக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு மிடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலை குறித்துகருத்துத் தெரிவிக்கையிலேயே பேராசிரியர் பீரீஸ்மேற் கண்டவாறு கூறினார். (ந)

## மீளக் குடியமர்வில் ஆர்வம்

(மீசாலை)

தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்தத்தினை அடுத்து தென்மராட்சியைச் சேர்ந்த கொடிகாமம், அல்லாரை, மீசாலை, கச்சாய், மிருசுவில் நெற்பலி பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது அங்கு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதினால் பிள்ளைகள் அங்கு கல்வியை தொடர வழி ஏற்பட்டுள்ளது. சொந்த இடங்களில் ஆரம்பிக்கப்பட்டபாடசாலைகளில் யா-மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், யா-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலம் என்பன மிக சிறப்பாக இயங்கி வருகின்றது.

மீள ஆரம்பிக்கப்படும்பாடசாலையைச் சேர்ந்த நிரந்தர ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் ரத்தாக்கப்பட்டுள்ளதாகவும் உடன் தமது சொந்த பாடசாலைகளில் கடமையை பொறுப்பு ஏற்கும் படியும் தென்மராட்சி வலயக் கல்வி வலயம் இடமாற்றக் கடிதங்களை அனுப்பி வருகின்றது. (உ-229)

## சைக்கிள் ஓட்டப் போட்டி

(ஊர்காவற்றுறை)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் நடத்தும் இளைஞர் யுவதிகளுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

(செ-75)

## பிரிவுபசார விழா

(சுன்னாகம்)

யாழ்பல்கலைக்கழக விஞ்

நல்லூர் பிரதேசசபை

நல்லூர் பிரதேசசபை

# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேசசபையால் திருநெல்வேலிச் சந்தியில் ஓர் மணிக்கூட்டுக்கோபுரம் அமைப்பதற்கான வேலைக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| இவ்வேலைக்கான கேள்வி விண்ணப்பதிகதி: | 15.01.2002 தொடக்கம் 18.01.2002 வரை. |
| விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி: | 21.01.2002 திகதி நண்பகல் 12.00 வரை. |

அன்றையதினம் பிற்பகல் 2.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
கேள்விப்பத்திரக் கட்டணம்:- ரூபா 750.00
கேள்வி வைப்புப்பணம்:- ரூபா 5750.00
மேலதிக விபரங்களுக்கு நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**க.மணிபல்லவராஜன்**
(ஜே.பி.யு.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

தலைமை அலுவலகம்
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
11-01-2002

(கி-3262)


## பிரிவுபசார விழா

(சுன்னாகம்)

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி வருட மாணவர்களின் பிரிவுபசார விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அனைத்துபீட மாணவர் ஒன்றிய பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி இ.குமாரவடிவேல் இந்நிகழ்விற்கு பிரத விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளபர்.

(உ.10)

## இலங்கை வங்கி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் இயங்கி வந்த இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை எதிர்வரும் 15ம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் தற்காலிகமாக அச்சு வேலியில் வல்லை வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் தனது கருமங்களை ஆரம்பிக்க உளளதாக இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இக்கிளையை இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி க. துரைராசா அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

களில் கடமையை பொறுப்பு ஏற்கும் படியும் தென்மராட்சி வலயக் கல்வி வலயம் இடமாற்றக் கடிதங்களை அனுப்பி வருகின்றது. (உ-229)

## தெய்வீக இசையரங்கு

(நல்லூர்)

மருதனார் மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் தெய்வீக இசையரங்கின் தொடரில் இன்று சனிக்கிழமை காலை கலைஞானகேசரி சங்கீத பூஷணம் மீசாலையூர் ஏ.கே. ஏரம்பமூர்த்தி சொந்தசாகித்திய இன்னிசைக்கச்சேரியினை நிகழ்த்தவுள்ளார்.

(செ-103)

### தையல் பயிற்சி

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள இவ்வாண்டுக்கான தையல் மனையியல் பயிற்சிநெறி நவாலி புலவர் வீதியிலுள்ள கட்டடமொன்றில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி மேற்படி முகவரியில் சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(உ-120ர்

ஆற்றுவார்ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்ற லு ளெல்லாம் தலை
குறள்

வலம்புரி

## வீரத்துறவி தந்த ஆன்மீகம்

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் ஜனன தினம் இன்று. இந்து மதத்தின் பெருமையை -அதன் தத்துவங்களை உலகறியச் செய்த பெருமையும் அவருக்கேயுண்டு. அமெரிக்கவின் சிக்காகோ நகரில் சகோதர, சகோரிகளே என விழித்துப் பேசி, இந்துமதத்தின் கனிவை பண்பாட்டு மொழியை எடுத்தியம்பியவர் அவர்.

இன்று இளஞ்சமூகம் ஆன்மீகக் கொள்கைகளுக்கு இடங்கொடாது ஆபாசமே வாழ்க்கை என்பது போல் நடந்து கொள்வது ஊழிக்காலத்தின் அறிகுறியோ என எண்ணத் தோன்றுகிறது,

சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு கூறிய அறிவுரைகளும்- ஆன்மீக கருத்துக்களும் அவர்களுக்கு சென்றடையுமாயின் இந்த உலகில் ஆபாசத்திற்கும்கலாசார பிறழ்வுகளுக்கும்இடமிருந்திராது.

சுவாமியின் ஆன்மிகக் கருத்துக்கள் சமூகம் எனும் விளை நிலத்தில் விதைக்கப்படாததனால்.

தேவையற்ற புல்லுகளும் பூண்டுகளும் இந் நிலத்தில் விதைபட்டு விட்டது.

இதனைத்தடுக்கஇளஞ் சமூகம் முன்வரவேண்டும் அவ்வகையில் யாழ். மண்ணில் ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் இணைந்து சுவாமியின் பிறந்த தினமான இன்று தொடக்கம் ஒருவார காலத்தை ஆன்மீக வாரமாகப் பிரகடனப்படுத்தி சுவாமியின் சிந்தனையைப் பரப்ப முனைந்துள்ளனர். இவர்களின் இப்பணி முயற்சி பாராட்டுதற்குரியது. ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள் ஒன்றுசேர்வதுகாலத்தின் தேவையாகும்.

ஏனெனில் மனித சுகத்திற்கு வரைவிலக்கணம் கூறிய உலக சுகாதார ஸ்தாபனம் (W. H. O) உடல் உள சமூக ஆன்மீக நிலையில் நன்னிலையில் இருத்தல் என தெளிவுபடுத்தியது.

ஒவ்வொரு மனிதனும் ஆத்மீக சுகத்தை பலத்தைப் பெற்றிருப்பானாயின் ஏனைய சுகங்கள் தம்பாட்டிலேயே ஏற்படும் என்பது திண்ணம் இவ்வகையில் ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்களின் பாதை ஆன்ம சுகத்தை இம்மண்ணுக்கு வழங்குவதாக அமையட்டும் அதனால் பாரிய மன மாற்றத்தை நம் சமூகம் நிச்சயம் அனுபவிக்கும்.

---

திறனாய்வுக்களம்

# புதுமையான வார்த்தைப் பிரயோகங்களுள்ள “கனவுகளின் எல்லை” என்ற கவிதை தொகுப்பு!

இடம்பெயர்வுக்குப் பின்பு யாழ்ப்பாணக் கவிதைப் புலத்தில் தனக்கென ஒரு தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொண்டவர் கவிஞர் த.ஜெயசீலன் ஆவார். இவர் கவிதைகள் இலங்கை வானொலியிலும் பத்திரிகையிலும் அடிக்கடி ஒலிபரப்பாகியும் பிரசுரமாகியும் வந்துள்ளன.

அண்மையில் இவர் ‘கனவுகளின் எல்லை’’ என்ற கவிதைத்தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளார். இயற்கை வியத்தல், சுதேச உணர்வு, உலகியலுக்கும் இறையியலுக்கும் இடையில் ஊஞ்சலாடும் மனத்தின் சிந்தனைப் போராட்டங்கள், பக்தியுணர்வு, காதல், மண்ணின் அவலங்கள், தன்னுணர்வு வெளிப்பாடு போன்ற கருத்துத் தளங்களிலிருந்து மேற்கிளம்பியஎழுபத்தியொரு கவிதைகள் இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### யாப்பமைதி

ஆச்சரியக் குறிகளையும், வினாக்குறிகளையும், புள்ளிக்கோடுகளையும் நம்பிக்கவிதையெழுதுகின்ற இளைய தலைமுறையினரிடையே யாப்பமைதியென்ற கடிவாளத்தை எளிதாகக் கையாண்டு கவிதைத்தேர் செலுத்துபவராக இவர் தன்னை அடையாளங் காட்டியுள்ளார். குறிப்பாகக் கலிப்பாவினங்களை லாவண்யத்தோடு இந்த நூலின் பெரும்பாலான கவிதைகளில் கையாண்டுள்ளார்.

‘‘துயரங்க உனைமேலும்
உறுதியாய் நம்பிடத்
துணை செய்யும் வழிகாட்டி
கள்
சோகங்கள் நீ எங்கும் சுடர்
கிறாய் என்பதைப் பறைசாற்
றுந் தொலைக்காட்சிகள்’’

என நல்லை முருகனைத் துதித்தபடிஇந்த நூல் ஆரம்பமாகிறது.

பொருளமைதியில் பக்தியை மட்டுமன்றி இன விடுதலையுணர்வு, சுயபரிசோதனை போன்ற பொருள் வீச்சுக்கள் ஊடுபாவாகக் கொண்டு இந்தக் ‘கவிமூலம்’ எனத் தலைப்பிடப்பட்ட கவிதைகள் அமையப் பெற்றுள்ளன.

### கவியுணர்வு

தினசரி வாழ்க்கையென்ற சிலந்திக்கூடுகளால் மூடப்பட்டுள்ள ஒவ்வொரு மனித உள்ளத்திலும் எங்கோ ஒரு மூலையில் கவியுணர்வு என்ற தெய்வீகப் புதையல் ஒளித்துள்ளது. சிந்தனைப் பட்டை தீட்டச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அந்த உணர்வை நன்கு அனுபவித்து அதனைப் பிறர்க்கு எடுத்துரைக்க முயல்வதாகக் ‘‘கவிதைப் பூமரத்தைக் கண்டுணர்க’’ என்ற தலைப்பிலான கவிதை அமைந்துள்ளது.

### கவிதைமரம் பூக்கின்றது

‘உனக்குள்’ கவிதை மரம் உள்ளதை நீ அறிந்துள்ளாயா? தெய்வ நினைவினிலே திடீரென்றென் கவிதை மரம் ஐயோ! நிறம் நிறமாய் வகை வகையாய் குளிர் நெருப்பாய் ஆனந்த அழுகை தரும் கண்ணீர்ப்பனி நனைந்ததேனக்க கவிதை மலர் பூத்தெனக்குப் பரிசளிக்கும் அந்த மலர்கள் என்னை அர்ச்சிக்க அர்ச்சிக்க மென்மை மனஞ்சிலிர்த்து மேன்மை உடை உடுத்து எனக்குள் குடியிருக்கும் இராட்

**இந்துவின் மைந்தன்**

சத விலங்குகளை கணமழித்து மனிதத்தைக் கண்டெடுத்துப் பூக்கின்றேன்’ என்று தொடர்கின்றகவிதை வரிகளூடாக இப்படியன், இந் நிறத்தன் என்றெழுதிக் காட்டவொண்ணாத கவிதா மனோபாவத்தைக் காட்சிப்படுத்த முயன்று தவிக்கின்றான் கவிஞன்.

### புதுமையான வார்த்தைப் பிரயோகம்

இந்தக் கவிதைநூல் கொண்டுள்ள இன்னொரு சிறப்பம்சம் யாதெனில் மரபுக்கவிதைகளில் -வழக்கில் இல்லாத சில புதுமையான வார்த்தைப் பிரயோகங்கள் -உவமைகள், தற்குறிப்பேற்றங்கள் கவிதைகளிடையே பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆகும்.

‘‘வண்டுகளின் வாயில் வாத்
தியங்கள் வைத்தது யார்?’’
‘‘வெய்யிற் சாறொழுக பூமி
கரமுரஞ்சிப் புத்துயிர்க்க’’
‘‘அப் பாவிகளை ஏக்கச்
சிலுவையில்துடிப்பார்கள்’’
‘‘தூவானம் சுகங் கேட்டு
நுள்ளியது’’

இவை போன்றவார்த்தைப் பிரயோகங்கள் இந்தக்கவிதை நூலில் பல இடங்களில்கையாளப்பட்டுள்ளன. இவை புதுக் கவிதை வல்லுநர்களால் கையாளப்படுகின்ற பிரயோகங்கங்கள் ஆகும்.

இன்னொருவகையில் சொல்வதானால், யாப்பமைதியை நிராகரிக்கின்ற ஒரு கவிதைப் புலத்தின் துருப்புச் சீட்டுக்களை யாப்பமைதிக்குட்பட்டு நின்று கொண்டு லாவகமாகப் பிரயோகித்துக் காட்டி வெற்றிபெற்றுள்ளார் கவிஞர் த. ஜெயசீலன்.

கவிஞர் இ. முருகையன், கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர்கல்வயல்குமாரசுவாமி போன்ற முதுகவிஞர்களும் இந்தவகையில் ஜெயசீலனுக்கு வழிகாட்டிபவர்கள் எனலாம்.

### கவிதா நிமிர்வு

ஒரு உண்மையான கவிஞனை அடையாளங் காட்டுவது அவனது தற்றுணிவு அல்லது கவிதா நிமிர்வு எனலாம். தான் வாழும் சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, சமூக வட்டங்களுக்குட்பட்டு நின்றுகவிதை பாடுபவர்களை காலம் செரித்து விடும். காலத்தை வெல்லும் கவிஞன் இத்தகைய எல்லை வட்டங்களுக்குள் அடங்காது நிற்பான்.

‘‘யானோர் வணிகப்
பரிசிலேன் அல்லன்’’
‘‘மன்னவனும் நீயோ?’’
வேடிக்கை மனிதரினைப்
போலே வீழ்வனென நினைத்
-தாயோ’’ கூற்றுவனா!
அவனைக் கொண்டு வந்து
தூக்கிலிடு’’ இத்தகைய நிமிர்வுள்ள வரிகள்

காலத்தை வென்ற கவிஞர்களால் மட்டும் உரைக்கப்படக் கூடியவை. அத்தகைய கவிதா நிமிர்வை ‘‘கனவுகளின் எல்லை’’ என்ற கவிதை நூலிலுள்ள சில கவிதைகளூடாகவும் தரிசிக்க முடிகிறது.

‘‘உயிர் துடிக்கும் நம்
நிலையை உணராதுன்போல்
உலுத்தர்களின் வால்பிடிக்
கப் பிரளாதென் நா
சுயம் இழந்து பகட்டின் பின்
அலையாதென் பா...’’

என்று தனது கவிதாநிமிர்வை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார் கவிஞர்.

### சமூகம் மூக்கைச் சுழிக்கும் மணம்

‘‘நேரம்’’ என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள கவிதை தேர்தல் ஆரவாரங்களை பின்வருமாறு எள்ளி நகையாடுகிறது.

‘‘நீயுந்தன் நீண்ட வேட்
டைப்பல் குருதி சிந்தும்
கூர்க்கொம்பு
சதையைக் கிழித்த நகம்...
மறைத்து

மற்றவனைத் தூற்றுகிறாய்!
மற்றவன் தன் வாய்நாற்றம்
மலங்கழுவாக் குதம், பீழை
வடியும் கண் மறைத்து
உன்னைப் பழிக்கின்றான்
ஒருவர் மேல் ஒருவர் மாறி
மாறி வாரி வீசும் சேறில்...
இருவரது நாற்றமும் முச்சந்தி
களில் மணக்கிறது. சமூகம்
முக்கைச் சுழிக்கிறது.’’

வாழ்க்கை பற்றிவரையறை செய்ய முயல்வதாக அமைந்துள்ள கவிதையில்,

‘‘வாழ்க்கை ஒரு மட்பாண்டம். வனைவது கடினம். ஆனால் போட்டுடைத்தல் சுலபம்! புரியாத வாழ்க்கை ஒரு அந்நியனின் பாஷை! அறியாமல் அறிந்தது போல் புன்னகையால் மழுப்பிப் புகைகிறோமே! வாழ்க்கையொரு தூண்டில் எதிர்பாராத் திமிங்கிலம் காத்திருந்தால் சேர்த்துவைத்தபுழுகூடத்தொலைவதும் நிகழ்வதனால்- என்ற வரிகள் ரசிக்கத் தக்கதாக அமைந்துள்ளன.

மரபுக் கவிதையில் ஈடுபாடு கொண்டவர்களும் புதுக் கவிதையில் நாட்டம் உடையவர்களும் வேறுபாடின்றி படித்துச் சுவைக்கத்தக்க வகையில் இந்தக் கவிதை நூல் அமைந்துள்ளது. இளையதலைமுறையினரின் ஆக்க முயற்சிகளுக்கு இவை உற்சாகமூட்டும்.

---

## தினசரி தியானம்

### வெற்றி வேல்

வெற்றிவேல் உற்ற துணை
வேந்தே நான் அடைந்த வெற்றிக் கெல்லாம் வித்து எது என்பது எனக்கு விளங்குகிறது. உனது உணர்ச்சியில் ஒரு முகப்பட்ட உள்ளத்தைக் கொண்டு நான் எதைச் செய்தாலும் அது வெற்றியே. உன்னிடத்து ஒப்படைத்த உள்ளமே வெற்றிவேல்.

கடவுளிடத்து இருப்பதெல்லாம் நம்மிடத்தும் உண்டு. கந்தன் உயிர்களுக்குச் சேனைத் தலைவன். வேலாயுதத்தைக் கொண்டு அவன் எக்காரியத்திலும் வெற்றி பெறுகிறான். மனது நம்மிடத்து உள்ளவேல் குவிந்து ஒரு முகப்பட்டு அது கடவுளைச் சார்ந்திருக்குமானால் அது வெற்றிவேல் ஆய்விடுகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

---

## கலைஞானி மறைவுக்கு ஆதீனமுதல்வர் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

வரலாறுகள் பல அழிந்து போன இக்காலத்தில் வரலாற்று ஆவணங்களை நம் சந்ததிக்குச் சேர்த்துத் தந்த பெருமை கலைஞானி அவர்களையே சாரும்.

மாமனிதர் கலைஞானி அவர்களின் மறைவு குறித்து, நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்சுவாமிகள் விடுத்துள்ளஅனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாமனிதர் கலைஞானி செல்வரத்தினம் அவர்களின் மறைவை அறிந்து மனநெகிழ்வடைந்தோம்.

இந்நாட்டின் கலைப்பொக்கிஷங்கள் அனைத்தையும் தனி மனிதனாக அன்று முதல் இன்று வரை காத்துத்தந்த சிறப்புக்குரியவர் கலைஞானி யாவார்.

வரலாறுகள் பல அழிந்து போன இக்காலத்தில் வரலாற்று ஆவணங்களை நம் சந்ததிக்குச் சேர்த்துத்தந்த பெருமை கலைஞானியையே சாரும்.

‘கலைஞானி’ என்ற புகைப்பட நிறுவனம் மூலமாகபல, பெரியார்கள், கலைஞர்கள், ஞானிகள், அறிஞர்கள், அரசியல் வாதிகளுடைய புகைப்படங்களை ஆவணப்படுத்திய பெருமையும் இவரையே சாரும்.

இவரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது. இவருடைய மறைவுக்கு அஞ்சலிசெய்யும் முகமாக இவருடைய பொக்கிஷங்களைப் பாதுகாப்பதே இவருக்கு செய்யும் மிகப் பெரிய அஞ்சலியாகும்.

மாமனிதர் கலைஞானி அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (உ-106)

# இந்தியாவில் பேசுவதை புலிகள் விரும்பின் அதனை மத்திய அரசு ஏற்கவேண்டும்!

## ம.தி.மு.க.செயலர் வை.கோ. கருத்து

(சென்னை)

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடக்கும் பேச்சு வார்த்தைகளை இந்தியாவில் வைத்துக்கொள்ள வேண்டும் என புலிகள் விரும்பினால் அதனை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக செயலர் வை.கோபாலசாமி கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையி லான பேச்சுக்களை இந்தியாவில் வைத்துக் கொள்ள மத்திய அரசி டம் புலிகள் கோரிக்கை விடுத்ததாக வெளி வந்த செய்திகள் இந்திய அரசியல் வாதிகளிடம் பெரும் முக்கியதத்துவம் பெற்றுள்ளது. இன்நிலையில் புலிகளின் கோரிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த போதே வை.கோ மேற்கண்டவாறு கூறியுள்ளதுடன் புலிகள் மீதான தடையையும் இந்தியா நீக்கவேண்டும் என்றும் கேட்டுள்ளார். (ந)

## ஆன்மீக எழுச்சியை அனுஷ்டிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்களால் ஆன்மீக எழிச்சிவாரம் இன்றுமுதல் எதிர்வரும் 19ம் திகதி வரை அனுஷ்டிக்கபடவுள்ளது. சுவாமி விவேகானந்தர் பிறந்த தினமான இன்று ஆரம்பமாகும் ஆண்மீக எழுச்சி வாரத்தில் சுவாமியின் சிந்தனைகளை சமூக மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் பணிகள் இடம் பெற உள்ளது.

இப்பணியில் பாடசாலைகள், திணைக்களங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களை ஈடுபடுமாறு ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆன்மீக எழுச்சி வாரத்தின் இறுதி நாளான எதிர்வரும் 19ம் திகதி சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளை வெளிப்படுத்தும் பொது நிகழ்வொன்றும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தென்மாகாண அமைச்சர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

தென்மாகாண சபையின் விவசாய நீர்ப்பாசன மீனவர் விவகார அமைச்சர் எம்.கே.ரஞ்சித் உட்பட மூவரை விசேட பொலிஸ் குழு கைதுசெய்துள்ளது. கடந்த பொதுத் தேர்தலின் போது வலஸ்முல்ல பகுதியில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக விசேட பொலிஸ் பிரிவின் விசேட அத்தியட்சர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார் (ந.4)

### நிரந்தர..

சமாதானபேச்சுவார்த்தையை ஆரம் பித்து வைக்கக்கூடிய சுமூகமான சூழ்நிலைஏற்பட வாய்ப்புண்டு என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜவர் கெல்கீசன் தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுக்குழுவினர் பிரதமர் ரணிலுடன் இரண்டு மணி நேரம் நடத்திய பேச்சுக்களின் போது அரசின் மோதல் தவிர்ப்புக்கு பதிலாக நிரநதர யுத்தநிறுத்தம் செய்வதற்கு பிரதமர் ரணில் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் வன்னிக்கான பொருளாதாரத்தடை நீக்கப்படுவதற்கான சாதகமான பதில்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**24ஆம் திகதிக்கு முன் நிரந்தர யுத்தநிறுத்தம்?**

தங்களது இரண்டுநாள் விஜயத்தின் போது பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களுடன் பேசியதில் இருந்து சமாதானப் பேச்சுவார்த்தையில் இருசாராரையும் ஈடுபடுத்தி வெற்றிகாணலாம் என்ற நம்பிக்கையுடன் நோர்வே திரும்புவதாகவும் இன்னும் இரண்டொரு தினங்களில் லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து அரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்திய விடயங்களை எடுத்துக் கூறப்போவதாகவும் தெரிவித்த நோர்வே தூதுக்குழு புலிகளின் யுத்தநிறுத்தம் முடிவடையவுள்ள எதிர்வரும் 24ம்திகதி வியாழக் கிழமை நள்ளிரவு 12மணிக்கு முன்பு நிரந்தர யுத்தநிறுத்த அறிவிப்பு பிரகடனம் ஒன்றை அரசும் விடுதலைப் புலிகளும் அறிவிப்பார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (வ)

### சுரேஸ்..

இலங்கையில் சித்திரவதைக்கு ஆளாகலாம் எனவும் தனது பாதுகாப்புக்கு உத்தரவு தருமாறும கோரி கனடா உயர் நீதிமன்றத்தில் சுரேஸ் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம் குறித்த நபரை இலங்கை அரசு சித்திரைவதையோ அல்லது மனித உரிமை மீறலுக்கோ உட்படுத்தாது என உறுதியான வாக்குமூலத்த பெற்ற பின்ரே அவரை நாடுகடத்தும்படி கனடா அரசாங்கத்தை கேட்டுள்ளது.

கனடா அண்மையில் விடுதலைப் புலிகளை தடைசெய்த போதும் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தவர் என குற்றம் சாட்டப்பட்டிருப்பவர் ஒருவரை கனடாவில் தங்குவதற்கு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளதென அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் (ந.4)

### இத்தாலிக்கு...

இதனையடுத்து இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதுடன் இரு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன படகில் சுமார் ஒரு மாதத்துக்குத் தேவையான உணவுப்பொருட்களும் எரிபொருளும் இருந்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இவ்வாறு ஜரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா முதல் மூன்று லட்சம் ரூபாவை கட்டணமாக செலுத்தியுள்ளனர். இதேவேளை கடந்த வாரம் இவ்வாறு சட்டவிரோதமாக வெளி நாட்டுக்கு செல்ல முற்பட்ட ஐம்பத் தெட்டுப் பேரை பொலிஸார் கைது செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ந.4)

### இலங்கையில்...

திரும்பியதும் திருப்பியனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

வவுனியா சென்ற பிரதித் தூதுவர் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் வவுனியா மாவட்ட நீதிவான், பாதுகாப்புப்படைத்தளபதி மற்றும் உயர் அதிகாரிகளையும் சந்தித்துப்பேசினார். (வ)

## 1 கோடியே 25 லட்சம் வாக்காளர்கள்

(கொழும்பு)

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒருகோடியே 25லட்சம் வாக்காளர்கள் தகுதிபெற்றிருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் 1ம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என அரசு முன்னர் அறிவித்திருந்த போதும் பின்னர் மேலும் இண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு செல்லும் தடையை யப்பான் நீக்கியது

(கொழும்பு)

ஜப்பான் நாட்டு பிரஜைகள் இலங்கை செல்வதற்கு இருந்த தடையை அந்நாடு நீக்கியுள்ளது விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தமும் அரசாங்கத்தின் மோதல் தவிர்ப்பும் காரணமாக இத்தடையை யப்பான் நீக்கியுள்ளதாக இலங்கைக்கான யப்பான் தூதரகம் அறிவித்துள்ளது எனினும் இவர்களை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கும் யாஎல போன்ற இடங்களில் இருக்கும் சரணாலயங்களுக்கும் செல்லவேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந.4)





கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கத்தினால் அண்மையில் விழிப்புக்குழு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட கிராம அபிவிருத்தி உத் தியோகத்தருடன் சங்கத்தலைவர் திரு.தனேந்திரன், கிராமசேவகர் திரு மகாலிங்கம், கொட்டடி.ச.ச. நிலைய பிரதிநிதிகள் சுஜீந்திரன், செல்வராசா மற்றும் மருத்துவபீட மாணவர்கள் ஆகியோரை முதலாவது படத்திலும் மேற்படி சங்கத் தினால் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண் டோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரால் அண்மையில் வடமராட்சி மத்திய மகளீர் கல்லூரியில் நடத்தப்பட்ட "சுருக்கெழுத்து தட்டச்சு தொழில்நுட்ப கலைவரலாறு" நூல் வெளியீட்டு விழாவில் நூலின் சிறப்புப்பிரதி ஒன்றை மத்திய மாகாண சுருக்கெழுத்தாளர் சங்கசெயலாளர். எஸ் .இரத்தின சிங்கத்துக்கு யாழ்ப்பாண பல் கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ் சிவலிங்கராசா வழங்குவதையும் அருகில் நூல் ஆசிரியர் க.வ.சிவச்சந்திரதேவன் நிற்பதையும் படத்தில் காணலாம்

படம் :-தென்மராட்சி செய்தியானர்.

## 19ல் வடபகுதிக்கு சமாதானப் பயணம்

(கொழும்பு)

வடபகுதிக்கான சமாதானப் பயணம் ஒன்றைபத்தொன்பதாந் திகதி இலங்கை ஐக்கிய நட்பியல் அமைப்பு திட்டமிட்டுள்ளதாக மேற்படி அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி தேசப்பிரிய விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

மாணவர் அமைப்புக்கள் சமூக நல அமைப்புக்கள், மதத்தலைவர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட சுமார் மூவாயிரம் பேர் வரை இப் பயணத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

இலங்கை லயன்ஸ் கழத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இந்தப் பயணத்தில் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மற்றும் அனுராதபுரம் ஊடாக இக் குழு வன்னி செல்ல உள்ளது.


திருமறைக் கலாமன்றம்

நாடகப் பயிலகம்

SCHOOL OF DRAMA

எமது மன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2002 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சி நெறியானது-

நாடக அரங்கு தொடர்பான பயிற்சியை பெற விரும்புபவர்களுக்கும் நாடக அரங்கியலும் பாடத்தை கற்கை நெறியாகக் கொண்டவர்களுக்கும் மிகவும் பயனுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி 25.01.2002

விண்ணப்பப்படிவங்களை நேரடியாக மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021-2393
இன்டர் நெட்:- www.cpateam.org

கவின் கலைகள் பயிலகம் - நுண் கலைகள் பயில்வதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 15.01.2002 என்பதை நினைவூட்டுகிறோம்.

(C/3260)



வலம்புரியின் வார மலர்

வானவில்

மிக விரைவில்

உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்

வானவில்
இல.15,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்,தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.